பக்கங்கள்:-27

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 19 | சனிக்கிழமை | 01.06.2024 | அதிர்வு 305

## எரிபொருள்களின் விலை நள்ளிரவு முதல் குறைப்பு



இலங்கையில் நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில்எரிபொருள் களின் விலையில் திருத்தம் 06▶

# யாழ். இந்துவில் 56 பேருக்கு 3 ஏ

## வேம்படியில் 30 பேருக்கு; ஹாட்லியில் 21 பேருக்கு



**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

2023ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று இணைய வழியில் வெளியாகின. அந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரியில் 56 மாணவர்கள் 3 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

அதேவேளை, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 30 மாணவிகள் 3 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 21 மாணவர்கள் 3 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 19 மாணவர்கள் 3 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர். 06▶

# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது!

## உரிய நேரத்தில் நடைபெற வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் சப்ரி வலியுறுத்து



**“ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியாது. உரிய நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும்.”**

**- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.** 06▶

## தென்மராட்சி மாணவன் சாதனை!



**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

2023ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கணிதப் பாடப் பிரிவில் (பௌதீக விஞ்ஞானம்) யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவன் மதியழகன் டினோஜன் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

மேற்படி மாணவன் அகில இலங்கை ரீதியில் 47 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பொறியியல் தொழிநுட்பப் பாடப் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் செல்வச்சந்திரன் ஶ்ரீமான் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இவர் அகில இலங்கை ரீதியில் 10ஆம் 07▶



நேற்று முன்தினம் ‘மாலை முரசு’ உலகச் செய்திப் பக்கத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இராட்சத பலூன்கள் மூலம் தென்கொரியாவில் குப்பைகளைக் கட்டி இறக்கியது வடகொரியா என்று செய்தி இருந்தது.

முதல் கட்டத்தில் பலூனில் குப்பையைக் கட்டி வான் வழியாக அனுப்பி இறக்குகின்றார்கள். அடுத்து என்ன வருமோ என்ற திகில் தென்கொரியாவில் இருந்து பிரதிபலித்தமையை உணர முடிந்தது.

இதை வாசித்த போதும் எனது உணர்வு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் 06▶



# இளம் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி உரையாடல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இளம் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் இளையோரின் பங்கேற்புடனான நிகழ்வுகளின் ஒரு அங்கமாக “இளையோர் கலந்துரையாடல் – நாளை இலங்கையின் இளம் தலைவர்கள்“ என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் சீர்த்திருத்த முயற்சிகள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் வெற்றிகரமான எதிர்கால பயணத்திற்கு இளையோரின் பங்களிப்பு மிக முக்கியமானது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது வலியுறுத்தினார்.

இளையோர் எழுப்பிய கேள்விகளுக்கு பதில்களை வழங்கிய ஜனாதிபதி, எதிர்கால இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான இளைஞர்களின் முயற்சிக்கும் பாராட்டு தெரிவித்தார்.

இதன்போது நாட்டின் எதிர்காலத்திற்கான முயற்சிகளுக்கான இளையோரின் யோசனைகளையும், பரிந்துரைகளையும் பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறை ஒன்றை செயற்படுத்துமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதன்போது தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, சர்வதேச அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் பணிக்காளர் தினுக் கொலம்பகே, இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் / பணிப்பாளர் பசிந்து குணவர்தன உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.












# பல்கலை கல்விசாரா ஊழியர்களுடன் நாளை மறுதினம் பேச்சு நடத்த முடிவு

## உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவிப்பு



"பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கங்களுடன் எதிர்வரும் திங்கள் கிழமை பேச்சு நடத்தப்படும்.

இவ்விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவரின் அரசும் சிறந்த தீர்வை வழங்க தயாராக உள்ளனர்.

- இவ்வாறு உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தற்போது பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இது ஒரு துரதிஷ்டவசமான விடயமாகும். ஏனென்றால் இதன் ஊடாக எதிர்கால சந்ததியினரான மாணவர்களே பாதிக்கப்படுகின்றனர். இதன் மூலம் நாளாந்தம் சுமார் 150 மில்லியன் ரூபா நேரடியான நட்டம் ஏற்படுகின்றது. இது நிதி ரீதியிலான நட்டம் மாத்திரமே. மனித நேரமும் இதன்மூலம் வீணடிக்கப்படுகிறது. எனவே இன்னும் ஒரு மணித்தியாலத்தையேனும் வீணடிக்க அரசாங்கத்திற்குத் தேவையில்லை. பெற்றோர் என்ற வகையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இதன் பாதிப்புத் தெரியும் என்று நினைக்கிறேன். எனவே அவர்களும் இதனைத் தொடர்ந்து கொண்டு செல்ல விரும்பமாட்டார்கள். இதற்கு சரியான தீர்வை எவ்வாறு தேடுவது என்பதையே நாம் இப்போது பார்க்க வேண்டும்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு நிறைவேற்ற சுமார் 1.1 பில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. நான் இதுபற்றி விரிவான அறிக்கையொன்றைத் தருமாறு கேட்டிருக்கின்றேன். மேலும் நாம் எவ்வாறு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்பது குறித்து நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் உயர் அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளேன். நான் எதிர்வரும் திங்கட்கிழமை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கத் தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளேன். ஒரு மத்திய நிலையில் இருந்து இதற்கு தீர்வு காண்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

உயர்கல்வி தொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றவர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட எமது அரசாங்கம் இவ்விடயத்தில் சிறந்த தீர்வைப் பெற்றுக்கொடுக்கவே எதிர்பார்த்துள்ளோம். தற்போதுள்ள பொருளாதார நிலையில் எதனை வழங்க முடியும் என்று அனைவரும் சிந்திக்க வேண்டும்.

மேலும் இந்நாட்டு உயர்கல்வி முறையில் மாற்றம் ஏற்பட வேண்டும். நான் அண்மையில் உலகலாவிய உயர்கல்வி மாநாட்டில் கலந்துகொண்டேன். இதன்போது, நவீன உலக மாற்றத்திற்கேற்ப உயர்கல்வி முறைமையில் மாற்றம் இடம்பெற வேண்டும் என்ற கருத்திலேயே பெரும்பாலான நாடுகள் இருக்கின்றன.

அதேபோன்று, தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழு ஸ்தாபிப்பதற்கான சட்ட மூலம் தற்போது தயார்செய்யப்பட்டு வருகின்றது. எமது நாட்டு மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர வெளிநாடுகளுக்குச் செல்வதற்குப் பதிலாக நம் நாட்டு உயர்கல்வியை மேற்கொள்ளக் கூடிய வகையில் மேம்படுத்த வேண்டும்."– என்றார்.

# மாலைத்தீவின் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கிறார்



மாலைத்தீவு வெளிவிவகார அமைச்சர் மூசா ஜமீர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அவர் எதிர்வரும் ஜுன் 03 ஆம் திகதி முதல் 06ஆம் திகதி வரை இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

# நாட்டின் பணவீக்கம் மே மாதத்தில் வீழ்ச்சி



தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் மே மாதத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த ஏப்ரல் மாதத்தில் 1.5 சதவீதமாகக் காணப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் மே மாதத்தில் 0.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன், ஏப்ரல் மாதத்தில் 3.3 சதவீதமாகக் காணப்பட்ட உணவுப் பணவீக்கம் மே மாதத்தில் 0.0 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

அதேநேரம், கடந்த ஏப்ரல் மாதத்தில் 2.3 சதவீதமாகக் காணப்பட்ட உணவல்லாப் பணவீக்கம் மே மாதத்தில் 1.3 சதவீதமாக பதிவாகியுள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



# சமூக, பொருளாதார இலக்குகளை எட்டுவதற்கு நவீன தொழில்நுட்பங்களை ஊக்குவிக்க வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“நாட்டில் சமூக மற்றும் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்தை துரிதப் படுத்த செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில்நுட் பங்களை நாட்டில் ஊக்குவிக்க வேண்டும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் தார்.

இலங்கையில் AI தொழில்நுட்பம் அல்லது செயற்கை நுண்ணறிவை அறிமுகப்படுத்துவது தொடர்பில் பல்கலைக் கழக கல்வியலாளர்களுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கை தொழில்நுட்ப முன்னேற்றத்தை அடைய வேண்டும். நவீன தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரை, நாம் மிகவும் பின்தங்கியுள்ளோம். பொருளாதார நன்மை களை அடைய தொழில்நுட்ப அறிவு போதுமான அளவு பயன்படுத்தப்படவில்லை. அண்மைக்காலமாக செயற்கை நுண்ணறிவு யுஜ தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்துகிறது. அதிலும் நாம் பின்தங்கியிருக்க முடியாது.

நாம் செயற்கை நுண்ணறிவுடன் முன்னேறினால், மற்ற தொழில்நுட்பங்களையும் பயன்படுத்த முடியும். செயற்கை நுண்ணறிவுக்குள் பல தொழில்நுட்பங்கள் உள்ளடங்கி யுள்ளன. அதனை நாம் பயன்படுத்தும் விதத்தை பொறுத்தே ஒரு நாடு என்ற வகையில் முன்னேற்றத்தை அடையலாம். முன்பு நாம் தகவல் தொழில்நுட்பத் துறையில் செய்த தவறை மீண்டும் செய்ய முடியாது.

தகவல் தொழில்நுட்பத் துறை திட்டங்களில் பயன்படுத் துவது குறித்து மாத்திரமே இதுவரையில் கவனம் செலுத் தியிருக்கிறோம். அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். அதன் பலனாகவே தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு சில நாடுகளை விடவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறோம்.

1984 ஆம் ஆண்டு நான் நாட்டில் கணினிக் கல்வியைத் அறிமுகப்படுத்தியபோது சின்க்கிளேயார் கணினிகளை அறிமுகப்படுத்தியிருந்தோம். அதனை நாங்கள் சரியாக செய்யவில்லை. அதற்காக நீண்ட காலத்தை செலவிட்டோம். அந்த அனுபவங்களை பாடமாக கொள்ள வேண்டும்.

அதன்படி, நாட்டில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட் பத்தை விரிவுபடுத்துவதற்கான செயற்பாடுகளை தொழில்நுட்ப அமைச்சு முன்னெடுத்து வருகிறது. டிஜிட்டல் மாற்றத்துக்கான முகவர் நிறுவனத்தை நிறுவது தொடர்பிலும் ஆலோசிக்கி றோம். டிஜிட்டல் மயமாக்கல் மூலம் சமூக, பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதனால் டிஜிட்டல் பொரு ளாதாரத்தையும் கட்டமைக்க முடியும்.

பொருளாதார ஆணைக்குழு மற்றும் நிதி அமைச்சு உள்ளிட்ட நிறுவனங்கள் இந்த விடயத்தில் முன் நின்று செயற்படும். அத்தோடு டிஜிட்டல் மாற்றத்துக்கான முகவர் நிறுவனமும் ஸ்தாபிக்கப்படும். இதற்குள் தேசிய செயற்கை நுண்ணறிவு மையம் என்ற சுயாதீன நிறுவனமும் ஸ்தாபிக் கப்படும். அதற்கான பணிப்பாளரும் பணிப்பாளர் சபை யொன்றும் நியமிக்கப்படும்.

இந்த நிறுவனங்களை நிறுவுவதற்கான சட்ட வரைவு உருவாக்கப்படுகிறது. அதற்கு மேலதிகமாக தொழில்நுட்ப மேம்பாட்டு சபையும் காணப்படுகிறது. அதேபோல் வணிக ஆராய்ச்சியை ஊக்குவிக்க நிதியளிப்போம். நாம் செய்யும் முதலீடுகளில் இலாபம் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். நாம் வெற்றியடைவதற்கான ஒரே வழியாக இதனை மட்டுமே சொல்ல முடியும்.

இந்த டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதும், அதில் பெரும் பகுதி பயன்படுத் தப்படவில்லை. எவ்வாறாயினும் அடுத்த ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்வோம்.

இத்திட்டத்தில் முடிந்த அளவில் தனியார் துறையினரின் பங்களிப்பை பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறோம்.

செயற்கை நுண்ணறிவை (AI) விரிவுபடுத்த பாடசாலை களுக்குள் AI சங்கங்களைத் (AI Societies) தொடங்குமாறு அறிவுறுத்தியுள்ளேன். மேலும், பல்கலைக்கழகங்களில் செயற்கை நுண்ணறிவை அதிகபட்சமாக பயன்படுத்த வேண்டும். முக்கியமாக தொழில்நுட்பத்தை அடிப்படை யாகக் கொண்டு 4 புதிய பல்கலைக்கழகங்களை நிறுவ திட்ட மிட்டுள்ளோம். பொறியியல் பீடங்கள் இல்லாத பல்கலைக் கழகங்களில் பொறியியல் பீடங்களைத் ஆரம்பிக்கவும் நட வடிக்கை எடுக்கப்படுகிறது.

அடுத்த 05 ஆண்டுகளில் அதிகபட்சமாக செயற்கை நுண் ணறிவைப் பயன்படுத்துவதே எமது 05





# முதியவர் கொடுப்பனவு நிறுத்தப்படமாட்டாது



அஸ்வெசும நலன்புரித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிலையில் இதுவரையில் வழங்கப்பட்டு வந்த முதியர்களுக்கான கொடுப்பனவு நிறுத்தப்படுமென வெளியாகும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

2024 மே மாதம் கொடுப்பனவுகளை வழங்குவதற்குத் தேவையான சுமார் 1518 மில்லியன் ரூபா நிதி மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப காரணங்களினால் கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருந்தாலும், ஜூன் மாதம் இரண்டாம் வாரத்தின் பின்னர் பிரதேச செயலகங்களில் வழமையான முறையில் முதியவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் நலன்புரி நன்மைகள் சபை அறிவுறுத்தியுள்ளது.

அதேபோல் ஜூன் மாத கொடுப்பனவும் குறித்த மாதத்திலேயே வழங்கப்படும் என்றும், அஸ்வெசும கொடுப்பனவு கட்டமைப்பின் கீழ் உரிய வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்பிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அந்த சபை அறிவித்துள்ளது.

இதனிடையே தற்போது அஸ்வெசும நலன்புரித் தொகையைப் பெற்றுக்கொள்ளும் குடும்பங்களிலிருந்தும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.





# சமூக, பொருளாதார இலக்குகளை எட்டுவதற்கு நவீன தொழில்நுட்பங்களை ஊக்குவிக்க வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(4ஆம் பக்கத் தொடர்ச்சி....)

இலக்காகும். இத்திட்டம் அடுத்த ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்படும். இறக்குமதியைச் சார்ந்த பொருளாதாரத்தில் இருந்து ஏற்றுமதி பொருளாதாரமாக நாம் மாறவும் இது மிக அவசியமானதாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டி உள்ளன. தற்போதுள்ள கடனை செலுத்த 2027 - 2040 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, 2035க்குள் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு அதற்குள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். அதனால்தான் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை மேம்படுத்த முயற்சிக்கிறோம். இந்த பொருளாதார வளர்ச்சி இலக்கை அடையாவிட்டால், நமது நாட்டிற்கு எதிர்காலம் இல்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும், செயற்கை நுண்ணறிவு உலகம் முழுவதும் பரவியுள்ளது. தெற்காசியாவில் ஒரு தனித்துவமான அடையாளத்தை நாம் பதிப்பதற்கு அந்த தொழில்நுட்பத்தை சார்ந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கும் இது பயனளிக்கும். செயற்கை நுண்ணறிவுக்கும் பௌத்த தர்மத்திற்கும் இடையிலான தொடர்பை ஆராய்வது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது." – என்றார்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எங்களின் நிலைமையை நினைவூட்டியது.

அது 90களின் முற்பகுதி. யாழ்ப்பாணக் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அரச படைகள் வான் வழியாக வந்து புலிகளின் நிலைகள் என்ற கணக்கில் கண்மூடித்தனமாகக் குண்டு வீசிப் போன மோசமான காலம் அது.

வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி, அலுவலகத்துக்கு அலுவலகம் பதுங்கு குழிகள், பங்கர்கள் தாராளம். குண்டு வீச்சு விமானச் சத்தம் கேட்டதும் மக்கள் அடித்துப் புரண்டு ஓடி, பங்கருக்குள் தஞ்சம் புகும் நினைவழியா நாள்கள் அவை.

எங்கள் அலுவலகத்தின் புறூவ் ரீடர் ஒருவர் விடியும் வேளையில், குண்டு வீச்சு விமானச் சத்தம் கேட்டதும் நித்திரைப் பாயிலிருந்து கண் விழித்துக் கூடப் பார்க்காமல், அரக்கப் பறக்க, சுய சிந்தனையே இல்லாமல், தன்னிலை மறந்து, பங்கரை நோக்கி ஓடிவந்த கோலம் என் கண் முன்னே விரிகின்றது கொஞ்சம் ஆபாசம் என்பதால் விவரிக்காமல் விட்டு விடுகிறேன். அச்சத்துக்கும் பீதிக்கும் நடுவில் ஒருபுறம் நடுக்கத்துடனும், மறுபுறம் நகைச்சுவையாகவும் கழிந்த விடயங்கள் அவை.

குண்டு வீச்சு விமானங்கள் அப்போது இரண்டு வகை. வேகமாக வந்து இலக்கை நோக்கிக் குத்திப் பதிந்து, குண்டுகளை வீசிச் செல்லும் சுப்பசோனிக் போன்றவை ஒரு ரகம். அவை தாக்குதல் நடத்தும் இலக்குப் பகுதிதான் குண்டு வீச்சில் பெரும் சேதம் அடையும்.

இன்னொன்று - வானத்தில் மிக உயரத்திலிருந்து பெரும் குண்டு பரல்களை உருட்டி விடுவது. அந்த பரல் 4 அல்லது 5 நிமிடங்கள் வானத்தில் விமானத்தின் பயண வேகத்தில் பறந்து, காற்றைக் கிழித்து கொண்டு வந்து விழுந்து வெடிக்கும். பெரிய பரல் குண்டு என்பதால் வெடித்த பிரதேசம் முழுவதும் சின்னாபின்னமாகும். வீடுகள், கட்டடங்கள் தகரும். பெரும் உயிரிழப்புக்கள், நாசங்கள் ஏற்படும்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியை அண்டியிருந்த எமது ஆசிரியர் பீட அலுவலகத்துக்குப் பக்கத்திலும் நள்ளிரவு வேலை அப்படி ஒரு பரல் விழுந்தது. அச்சமயத்தில் விமானச் சத்தம் கேட்டதும் நாங்கள் - பத்திரிகை அலுவலக இரவு நேரப் பணியாளர்கள் எல்லோரும் - பங்கருக்குள் தஞ்சம் புகுந்து நடுக்கத்துடன் பதுங்கி இருந்தோம்.

அந்த பரல் குண்டு காற்றைக் கிழித்துக் கொண்டு வரும் சத்தம் துல்லியமாகக் கேட்டது. எங்கள் பங்கரில் இருந்து ஒரு 30 மீற்றர் தொலைவில் 'டோம்' என்ற பெரும் சத்தத்துடன் அது விழுந்தது. அதிர்ஷ்டவசமாக அது வெடிக்கவில்லை. எங்கள் அலுவலக எல்லைச் சுவரோடு இருந்த பக்கத்து வீட்டுக் கிணற்றுக் கட்டில் மோதி, சுமார் 30 மீற்றர் தூரம் அது உருண்டு போய்க் கிடந்தது. அது வெடித்திருந்தால் அன்று எங்கள் அலுவலகமும் காலி, எமது பங்கரும் கூட முழுதாகப் புதையுண்டு போயிருக்கலாம்.

அடுத்த நாள் புலிகள் வந்து வெடிக்காத அந்த வெடிகுண்டு பரலை மீட்டு எடுத்துச் செல்வதைக் கண்டேன்.

அதிலிருந்த வெடி மருந்துகளைப் பின்னர் புகையிலை சிப்பங்களுக்குள் பதுக்கி, கொழும்புக்குக் கடத்தி, அங்கு கொண்டு போய், அந்த வெடிமருந்தில் தான் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேயரத்தினவை குண்டுத் தாக்குதல் மூலம் புலிகள் கொன்றார்கள் என்றும், அது கொள்கை ரீதியான ஒரு நடவடிக்கை என்றும் புலிகளின் மூத்த பிரமுகர் ஒருவர் எனக்கு பின்னர் சொன்னார்.

அதுவல்ல இன்று கூற வரும் விடயம்.

இப்படி வெடிகுண்டு பரல் உருட்டும் விமானம் சீன தயாரிப்பு ரகம். 'வை - 8' என்று அதற்குப் பெயர். அதே சமயம் 'வை- 12' ரக சிறிய விமானங்களும் இருந்தன. இந்த ரக விமானங்களை அவற்றின் பெயர்களை வைத்து செய்தி எழுதுவது - அழைப்பது - வாசகர்களுக்கு புரியாது என்று நாம் குழம்பிக் கொண்டிருந்த காலம் அது.

இந்த விமானம் முதல் பரல் உருட்டியமை பற்றிய செய்தி விவரம் உண்டு. ஆரம்பத்தில் இந்த விமானத்திலிருந்து உருட்டப்பட்ட பிளாஸ்டிக் பரல்கள் நகர மத்தியில் விழுந்து சிதறின. அவற்றில் வெடிகுண்டுகளோ, வெடிப் பொருள்களோ இருக்கவில்லை. ஒரே கழிவு நாற்றம். கழிவுப் பொருள்களை ஏற்றி வந்து நகரில் விமானப்படையினர் பரல் மூலம் கொட்டுகிறார்கள் என்று ஆரம்பத்தில் செய்தி எழுதிய நினைவும் உண்டு. கொட்டப்பட்ட கழிவில் மனித மலமும் இருந்ததாகக் கூடப் பேசிக் கொண்டார்கள்.

இந்த வை-8 ரக விமானம், வண்டு ரீங்காரம் இடுவது போல உறுமிக் கொண்டு தான் வரும். அதனாலும், அது கொட்டிய கழிவு பற்றிய பேச்சினாலும் அந்த விமானத்துக்கு 'பீ வண்டு' என்று மக்கள் பெயரிட்டுப் பேசிக்கொண்டார்கள். ஆனால் அந்தப் பெயரை நாம் பத்திரிகையில் பயன்படுத்த முடியாது. ஆகையினால் வேறு வழி தேடி தேடினோம்.

அது சீனத் தயாரிப்பு விமானம். மிகப் பெரியது. பின்பக்கத்தில் கதவு திறக்க அதற்குள் ஒரு வான் போன்ற வாகனத்தை கூட ஏற்றிக்கொண்டு செல்ல முடியும். பிற்காலத்தில் இராணுவம் யாழ். குடா நாட்டைக் கைப்பற்றிய பின்னர் அதில்தான் ஆரம்பத்தில் பலாலி - இரத்மலானை பயணிகள் விமான சேவை நடந்தது. பக்கவாட்டில் பலகைத் தட்டை நீள சீற்றாக அடித்திருப்பார்கள். அதையொட்டி நீண்ட கம்பியில் பஸ்ஸில் கைப்பிடி தொங்குவது போல கைபிடிகள் தொங்கும். விமானத்தின் பக்கச் சுவரோடு சாய்ந்து அமர்ந்தபடி, அந்தக் கைப்பிடியைப் பற்றியவாறுதான் விமானப் பயணம். விமானம் ஏறும் போது பின் பக்கமாகவும், இறங்கும்போது முன் பக்கமாகவும் பயணிகள் ஒருவரோடு ஒருவர் முண்டியபடி விமான சரிவுக் கேற்ப அந்த நீள தட்டு சீற்றில் இழுபடுவர். விமானம் ஓடு பாதையில் ஓடத் தொடங்கிய பின்னர் தான் பின்பக்கக் கதவை மூடுவார்கள். அது போல விமானம் இறங்கியதும் அது ஓடு பாதையில் ஓடி நிற்க முன்னரே பின் கதவைத் திறந்து விடுவார்கள். ஓடுபாதை தெரியும். அது பிற்காலத்தில் அதில் பயணம் செய்த அனுபவம்.

அது குடாநாட்டில் எங்களுக்கு வெடிகுண்டு பரல் வீசிய காலத்துக்கு வருவோம். நானும் எங்கள் ஆசிரியர் கானமயிலநாதனும் கதைத்து அந்த விமானத்திற்கு ஒரு பெயர் சூட்டினோம். அது சீனத் தயாரிப்பு விமானம். தேர் போல பெரியது. அதனால் அதற்குச் 'சீனச் சகடை' என்று நாமாவளி செய்தோம். அந்த விமானத்தை 'சீனச் சகடை விமானம்'என்றுபெயர்குறிப்பிட்டுஎழுதத்தொடங்கியதும், அதுவே குடா நாட்டு மக்களின் வாயில் நுழைந்து கொண்டது. 'பீ வண்டு' என்ற பெயரை மக்கள் மறந்து போனார்கள். 'சகடை' என்றே அதைக் குறிப்பிடத் தொடங்கினர். அந்த நாள் வாசகர்களுக்கு இந்தப் பெயர் நன்கு நினைவிலிருக்கும்.

அந்தச் சீனச் சகடையில் இருந்து உருட்டி விடப்படும் பரல்களின் வேகம், அவை சென்றடையும் இலக்கு, தூரம் போன்றவற்றை விமானத்தில் பறந்தவாறே கணக்கிடுவதற்காகவே ஆரம்பத்தில் கழிவுகள் அடங்கிய பரல்களை நகரின் மீது உருட்டி, விளையாடி, கணக்கிட்டார்கள் விமான படையினர் என்பது பின்னர்தான் தெரிய வந்தது.

அந்தக் கணக்கீடுகளின் அடிப்படையில் தான் பின்னர் பேரழிவுதரும் பாரிய பரல் வெடிகுண்டுகள் சீனச் சகடையிலிருந்து உருட்டி விடப்பட்டன.

ஒரு தடவை அது பலாலிலிருந்து புறப்பட்டு நகரப் பக்கம் வந்தால், மூன்று, நான்கு வெடிகுண்டு பரல்களையாவது உருட்டி விட்டுத்தான் போகும். அவை காற்றில் அசைந்து வருவதைப் பார்த்து குலை நடுங்கும் மக்களின் அவலம் இப்போது நினைத்தாலும் அடிவயிற்றை பிசைகின்றது.

தென்கொரியா மக்களே..! கவனம் இப்போது பரீட்சார்த்த முயற்சியில் குப்பைகள் வருகின்றன. இவற்றிற்குப் பின்னர் அடுத்தது வெடிகுண்டோ தெரியவில்லை. ஆகவே கவனம்.

அனுபவத்தில் கூறும் எச்சரிக்கை இது...!

## யாழ்.இந்துவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 9 மாணவிகள் 3 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் 9 மாணவிகள் 3 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 6 மாணவர்கள் 3 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் 5 மாணவிகள் 3 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

## ஜனாதிபதித் தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“அரசமைப்பில் உள்ளவாறு தேர்தல்கள் நடைபெற வேண்டும். ஆகவே, ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியாது. பிற்போடவும் கூடாது.

நாங்கள் கடந்த இரண்டு வருடங்களில் சிறப்பாகச் செயற்பட்டுள்ளோம். அது தொடர்வது சிறந்த விடயம். ஆனால், அதனைத் தீர்மானிப்பது யார்? மக்களே தீர்மானிக்க வேண்டும்.

நாங்கள் மக்கள் முன்னிலையில் சென்று அவர்கள் எங்கள் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும். அவர்கள் நம்பவில்லை என்றால் அவர்கள் யார் வேண்டும் என்று தீர்மானிக்கலாம். ஜனநாயகம் என்பது அதுதான்.

தேர்தல்களை ஒத்திவைப்பது தொடர்பான கருத்துடன் என்னைத் தொடர்புபடுத்த விரும்பவில்லை. தேர்தல்கள் உரிய நேரத்தில் நடைபெற வேண்டும். ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில் இடம்பெற வேண்டும்.” - என்றார்.

## எரிபொருள்களின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 13 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 355 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 16 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நேற்று நள்ளிரவு முதல் ஒரு லீற்றர் ஒட்டோ டீசல் 317 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 13 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 202 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

# ஒரு லட்சத்து 73 ஆயிரத்து 444 பேர் பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதி



2023 ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 269,613 பரீட்சாத்திகளில் 173,444 பேர் (64.33 வீதம்) பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமையுடையவர்கள் என அறிவிக்கப்பட்டது.


அத்துடன், பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 190 பேரின் பரீட்சைப் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

146 பாடசாலை பரீட்சாத்திகள், 44 தனியார் பரீட்சாத்திகளின் பெறுபேறுகளே இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளன என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருக்கோணேஸ்வர ஆலயத்தின் அபிவிருத்திக்கு ஆவன செய்ய கிழக்கு ஆளுநரிடம் வலியுறுத்தல்!

## கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை



திருக்கோணேஸ்வர ஆலயத்தின் புனிதத்தையும் அபிவிருத்தியையும் பேணுவதில் கிழக்கு மாகாண ஆளுநர் உடன் அக்கறை எடுத்தல் வேண்டும்.

– இவ்வாறு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானைக் கடிதம் மூலம் கோரியிருக்கின்றார்.

அக்கடிதத்தின் சாராம்சம் வருமாறு:-

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சைவத் தமிழர்களின் தலையாய கோவிலாகிய திருக்கோணேஸ்வரத்தை பாதுகாப்பதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் த செந்தில் தொண்டமான் அவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

திருக்கோணேஸ்வரத்துக்குச் செல்லும் பாதையின் இரு மருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள பெட்டிக் கடைகளை அவ்விடத்தில் இருந்து நீக்கி அவர்களுக்கு மாற்று ஒழுங்கு செய்ய வேண்டும்.

கோணேஸ்வரத்துக்குச் செல்லும் பக்தர்களின் புனித வழிபாட்டுக்கு உரிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

திருக்கோணேஸ்வரத் திருப்பணிக்கு தொல்லியல் திணைக்களம் பல்வேறு இடையூறுகளைச் செய்து வந்துள்ளது. இவ்விடையூறுகளை நிறுத்தி, திருக்கோணேஸ்வரத்தின் பாரிய திருப்பணிகளை முன்னெடுப்பதற்கு ஏற்பாடு செய்து உதவுங்கள்.

திருக்கோணேஸ்வரப் புனித தீர்த்தமாகிய பாபநாசம் தீர்த்தக்கரையை புனருத்தாரணம் செய்து பொதுமக்கள் அவ்விடத்தில் தமது கடமைகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

திருக்கேதீஸ்வர ஆலயத்தை இந்திய அரசு கருங்கற் கோயிலாக புனர்நிர்மாணம் செய்தது போல் திருக்கோணேஸ்வரத்தையும் அழகாக நிர்மாணிப்பதற்கு இந்திய அரசிடம் வேண்டுதல் விடுவிக்கப்பட்டது. அவர்கள் அக்கறையாக இருக்கின்றனர் எனத் தகவல்கள் திரட்டினார்கள். ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேற்படி விடயங்கள் தொடர்பாக மதிப்பார்ந்த ஆளுநர் அவர்களே, துரித நடவடிக்கை எடுத்து உதவுமாறு நன்றியோடு வேண்டுகிறோம். – என்று உள்ளது.

## திருத்தம்

இலங்கைத் தமிழரசு கட்சியின் வழக்குத் தொடர்பாக நேற்றைய “மாலை முரசு” செய்தியில் ஒரு சிறு தவறு சுட்டிக்காட்டப்பட்டது.

நேற்று இடையீட்டு எதிராளியாகத் தம்மைச் சேர்த்துக் கொள்ளும்படி விண்ணப்பித்த சண்முகராஜா ஜீவராஜா சார்பில் சிறிதரன் எம்.பியின் சட்டத்தரணியான வி.புவிதரனே முன்னிலையானார் என்று குறிப்பிட்டு இருந்தோம். அது தவறு. சட்டத்தரணி துஷித்த அவர் சார்பில் முன்னிலையானார் என்பதே சரியாகும்.

## தென்மராட்சி மாணவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடத்தையும் பெற்றுள்ளார்.

உயிரியல் விஞ்ஞானப் பாடப் பிரிவில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி தாருகா மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

உயிரியல் தொழில்நுட்பப் பாடப் பிரிவில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் ஜெயசீலன் சுமன் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இவர் அகில இலங்கை ரீதியில் 28 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.


VACANCY

For Website & YouTube Media

Male / Female

- VJ (Video Jockey)
- Photographer
- Graphic Designer
- Editor
- Typist - English & Tamil

Qualification -

Minimum 2 Years Experience

G.C.E. A/L or Relevant Media Qualifications

Fluency in Computer Knowledge

Send your CV to mail before you contact

CONTACT - 0777 739 185

Email - lankamedianews@gmail.com

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பேரழிப்பின் நினைவு நாள்

ஈழத் தமிழர்களின் இனப் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்ந்த யாழ்ப்பாணம் 'பொதுசன நூலகம்' சிங்களப் பேரினவாதக் காடையர்களால் திட்டமிட்டு எரிக்கப்பட்டு இன்றோடு 43 ஆண்டுகளாகின்றன.

இலங்கையின் முதலாவது மாவட்ட சபைத் தேர்தல்கள் 1981 ஜூன் 4 அன்று நடத்த ஏற்பாடாகியிருந்தது. தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நானூறுக்கும் அதிகமான பொலிஸார் நாட்டின் பல பாகங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மே 26 அன்று வடபிராந்திய பிரதிகப் பொலிஸ் மாஅதிபர் பி. மகேந்திரன் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அவருக்குப் பதிலாக பி. டி. குணவர்தனா என்பவர் அடுத்த மூன்று வாரங்களுக்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டார்.

1981 மே 31 ஞாயிற்றுக்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சியினர் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் மாவட்ட சபைக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றை நடத்தினர். இதன்போது அங்கு பொலிஸார் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகினர். துப்பாக்கிச் சூட்டை நிகழ்த்தியவர்கள் யார் எனக் கண்டுபிடிக்கப்படவில்லை. புஞ்சி பண்டா, கனகசுந்தரம் ஆகிய இரு பொலிஸார் உயிரிழந்தனர்.

இந்த நிகழ்வை அடுத்து, நாச்சிமார் கோவிலடிக்கும் மற்றும் யாழ் நகரம் எங்கும் பொலிஸாரும், துணை இராணுவக் குழுவினரும் சீருடை அணிந்தவர்களாகவும், சீருடை அணியாதவர்களுமாக விரைந்து அடாவடித்தனங்களில் ஈடுபட்டனர். அருகில் இருந்த வீடுகள், கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. பொதுமக்களும் தாக்கப்பட்டனர். யாழ் பிரதான வீதியில் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சி அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டது. அன்றிரவு யாழ்ப்பாணத்தின் பிரபல வணிக நிறுவனங்கள், கடைகள் என அனைத்தும் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

அன்று கொளுத்தப்பட்ட வன்முறைத் தீ மறுநாளும் கொழுந்துவிட்டு எரிந்தது. ஜூன் முதலாம் திகதி இரவு யாழ்ப்பாணத்திலிருந்த ஈழநாடு தினசரி அலுவலகமும், அதற்கு அருகிலிருந்த கடைகள் பலவும் தீயிட்டு கொளுத்தப்பட்டன. அன்று முழுவதும் நிலவிய பதற்றச் சூழலை இந்தச் சம்பவம் மேலும் தீவிரப்படுத்தியது அதைத் தொடர்ந்துதான் அந்த வரலாற்றுக் கொடுமை அரங்கேறியது. ஆம், சிங்களப் பேரினவாத கும்பல் ஒன்று யாழ்ப்பாண பொதுசன நூலகத்தைத் திட்டமிட்டு கொளுத்தியது. தமிழ்ப் பண்பாட்டின் ஒரு பகுதி திரும்பப் பெற முடியாத வகையில் எரிந்து சாம்பலாகிப் போனது.

இருபதாம் நூற்றாண்டின் இன, பண்பாட்டு அழிப்புகளில் ஒரு மிகப் பெரும் வன்முறையாகக் கருதப்படும் யாழ்ப்பாண நூலக எரிப்பு நடந்து இப்படித்தான்.

ஹிட்லர் கூட செய்யாத கொடூர உச்ச வடிவம் யாழ் நூலக எரிப்பு. ஓர் இனத்தை அழிக்க வேண்டுமானால் அந்த இனத்தின் வரலாற்றை சுவடு இழக்க செய்ய வேண்டும் என்ற சதித் திட்டத்தின் கீழ் 1800 ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட ஓலைசுவடிகள், வரலாற்று சான்றுகள் உள்ளிட்ட 97,000 க்கும் மேற்பட்ட விலை மதிக்க முடியாத நூல்களை கொண்ட - தெற்காசியாவில் சிறந்த நூலகமாக விளங்கிய - யாழ் பொது நூலகம் நள்ளிரவில் சிங்களப் பொலிஸாரால் எரிக்கப்பட்டு, அந்தப் பண்பாட்டுப் பேரழிப்புக் கொடூரம் சிங்களத்தின் காட்டுமிராண்டித்தன முகத்தின் கோரத்தை உலகுக்கு அம்பலப்படுத்தும் விதத்தில் அரங்கேறியது.

இன்று நூலகக் கட்டடம் மீளமைக்கப்பட்டு, புதிய நூல்கள் சேர்க்கப்பட்டிருப்பினும், எரிந்துபோன பல நூல்களும், பழமைவாய்ந்த கையெழுத்துப் பிரதிகளும், ஏட்டுச் சுவடிகளும் வேறு பல ஆவணங்களும் திரும்பப் பெறமுடியாதவை.

இது 20ஆம் நூற்றாண்டின் இன, நூலழிப்புகளில் ஒரு மிகப்பெரும் வன்முறையாகக் கருதப்படுகிறது.

நூலகம் எரிக்கப்பட்டது ஈழத் தமிழ் மக்களின் ஆன்மாவில் அழியாக் காயம் ஒன்றை ஏற்படுத்தி, தமிழ்த் தேசியப் போக்குக்கு உரம் ஊட்டியது. தமிழீழ விடுதலை போராட்டம் வீச்சுப் பெற யாழ் நூலக எரிப்பும் ஒரு காரணமாயிற்று.

அந்தப் பேரழிப்பின் நினைவு நாள் இன்று.

# வெப்ப அலையால் 54 பேர் உயிரிழப்பு: டில்லியில் புழுதிப் புயல் வீசும் அபாயம்



வட இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் வீசி வரும் வெப்ப அலைகளால் இதுவரை 54 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தெற்குப் பகுதிகளில் தென்மேற்கு பருவ மழை தொடங்கியுள்ள நிலையில், வடக்குப் பகுதிகளில் கடுமையான வெப்ப அலை வீசி வருகிறது.

தலைநகர் டில்லியில் வரலாற்றில் முதல்முறையாக 126.14 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவானது. உச்சபட்ச வெப்பஅலை டில்லியில் வீசி வருவதாக வானிலை மையம் சிவப்பு எச்சரிக்கை விடுத்தது.

இந்த நிலையில், வட இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் வீசி வரும் வெப்ப அலைகளால் இதுவரை 54 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவுரங்காபாத்தில் 17 பேர், ஒடிசாவில் ரூர்கேலாவில் 10 பேர், அர்ராவில் 6 பேர், கயா மற்றும் ரோஹ்தாஸில் தலா 3 பேர், பக்சரில் 2 பேர், பாட்னாவில் ஒருவர், ஜார்கண்ட் மாநிலம் பலமு மற்றும் ராஜஸ்தானில் தலா 5 பேரும், உத்தர பிரதேசத்தின் சுல்தான்பூரில் ஒருவர், டில்லியில் ஒருவர் என மொத்தமாக 54 பேர் கடுமையான வெப்பத்தின் தாக்கம் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் ராஜஸ்தான், ஹரியானா, சண்டிகர், டெல்லி, உத்தரப் பிரதேசம், பிஹார், ஜார்கண்ட், ஒடிசா, கிழக்கு மத்தியப் பிரதேசம் மற்றும் விதர்பாவின் பல பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையாக 45-48 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை பதிவானது. தொடர்ந்து வெப்ப அலை வீசக்கூடும் என்று இந்திய வானிலை மையம் எச்சரித்துள்ளது.

அதன்படி, பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், டில்லி, ராஜஸ்தான், உத்தரபிரதேசம், பிஹார், ஜார்கண்ட் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் இன்றும் கடுமையான வெப்ப அலை வீசக்கூடும். மேலும், ஹரியானா, சண்டிகர் மற்றும் டில்லியில் புழுதிப் புயல் வீசும் என்று கணிக்கப்பட்டுள்ளதாக வானிலை மையம் அறிவித்துள்ளது.

அதேநேரம், நாளை வரை வடமேற்கு இந்தியாவின் சமவெளிகளில் இடியுடன் கூடிய லேசான மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழகத்தில் கோடை விடுமுறை முடிந்து ஜூன் 6 ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், கோடை வெயிலின் தாக்கத்தால், எதிர்வரும் ஜூன் 10 ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படும் என்று பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

# 'சிறைக்கு திரும்புகிறேன்; குடும்பத்தை பார்த்துக் கொள்ளுங்கள்'- கேஜ்ரிவால்



டில்லி மதுபான கொள்கை ஊழல் வழக்கில் அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு வழங்கப்பட்ட இடைக்கால பிணை இன்றுடன் நிறைவடைகிறது. இந்நிலையில், மீண்டும் சிறைக்கு திரும்புவது தொடர்பாக சமூக வலைதளத்தில் காணொலி பதிவு ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் குறிப்பிடுகையில்,

“தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள 21 நாட்கள் எனக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால பிணை வழங்கியது. அதன்படி நான் மீண்டும் திஹார் சிறைக்கு திரும்புகிறேன். இந்த முறை என்னை எத்தனை நாள் சிறையில் வைக்க உள்ளார்கள் என்பது தெரியவில்லை. ஆனால், மனதளவில் நான் தெளிவாக உள்ளேன்.

சர்வாதிகாரத்தின் பிடியில் இருந்து நாட்டைக் காக்க நான் சிறை செல்வதில் பெருமை கொள்கிறேன். என்னை வீழ்த்த முயன்று வீழ்ந்தது அவர்கள் தான். நான் சிறையில் இருந்த போது பல்வேறு வகையில் என்னை சித்ரவதை செய்தனர். எனக்கான மருந்துகளை நிறுத்தினர். அவர்களுக்கு என்ன வேண்டும், ஏன் இப்படி செய்கிறார்கள் என்பது எனக்கு தெரியவில்லை.

சிறையில் இருந்தபோது 70 கிலோ எடை இருந்தேன். இப்போது 64 கிலோ உள்ளேன். சிறையில் இருந்து வந்த பிறகும் உடல் எடை கூடவில்லை. தீவிர நோய் பாதிப்பின் அறிகுறியாக கூட இது இருக்கலாம் என மருத்துவர்கள் சொல்கின்றனர். நிறைய மருத்துவ சோதனைகள் மேற்கொள்ள வேண்டி உள்ளது.

நான் எனது வீட்டில் இருந்து மதியம் மூன்று மணி அளவில் சிறைக்கு சென்று, சரணடைய உள்ளேன். இந்த முறை என்னை கூடுதலாக வதை செய்வார்கள். ஆனால், எதற்கும் நான் வளைந்து கொடுக்க மாட்டேன்.” - என்றார்.

# ‘சட்டம் மீதான நம்பிக்கைக்கு சேதம்’ ட்ரம்புக்கு எலான் மஸ்க் ஆதரவு

அமெரிக்க நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தேர்தல் நிதியை முறைகேடாக கையாண்ட வழக்கில் குற்றவாளி என அந்த நாட்டு நீதிமன்றம் அறிவித்தது.

இந்த நிலையில், ட்ரம்புக்கு ஆதரவாக எலான் மஸ்க் குரல் கொடுத்துள்ளார்.

எலான் மஸ்க் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டின் முன்னாள் ஜனாதிபதி இதுபோன்ற விவகாரத்தில் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளார். அதிலிருந்தே தெரிகிறது இந்த தீர்ப்பில் அரசியல் உந்துதல் உள்ளது என்று. இதே நிலை யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். இது அமெரிக்க சட்ட அமைப்பின் மீதான மக்களின் நம்பிக்கைக்கு பெருத்த சேதமாக அமைந்துள்ளது.” என்று குறிப்பிட்டுள்ளார்.



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப், தன்னுடனான பாலியல் தொடர்பை மறைக்க ஆபாச நடிகை ஸ்டோமி டேனியல்ஸ்க்கு சுமார் 1.3 லட்சம் டொலர்களை 2016 ஆம் ஆண்டுக்கான தேர்தல் பிரச்சார நிதியில் இருந்து கொடுத்தார் என்று சொல்லப்பட்டது.

அதை மறைக்க போலி ரசீதுகளை சமர்ப்பித்தமை உறுதியானது. இதையடுத்து 12 ஜூரிகள் அடங்கிய குழு அதை விசாரித்து ட்ரம்ப் குற்றவாளி என அறிவித்தது.

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு; சம்பவ இடத்திலேயே மூவர் பலி



அமெரிக்காவில் இடம்பெற்ற துப்பாகிச் சூட்டில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் மினிசொட்டா மாகாணத்தின், மினியா பொலிஸ் நகரின் அடுக்குமாடிக் குடியிருப்பில் நேற்று இந்த துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபரொருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் அந்த நபரும் உயிரிழந்தார்.

இதன்படி, 3 பேர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்தனர் என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# கலவரம் தொடர்பான வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார் இம்ரான்



கலவரம் தொடர்பான வழக்கில் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும், தெஹ்ரீக்-இ-இன்சாஃப் கட்சியின் தலைவருமான இம்ரான்கானை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

கடந்த ஆண்டு ஊழல் வழக்கு ஒன்றில் இம்ரான்கானைப் பொலிஸார் கைது செய்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவரது ஆதரவாளர்கள் மே 9 ஆம் திகதி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது ராவல்பிண்டியில் உள்ள இராணுவ தலைமையகம், அருங்காட்சியகம் என பல கட்டடங்கள் சேதமடைந்தன. இதேவேளை கலவரத்தில் ஈடுபட்டோரை பொலிஸார் கைது செய்தனர்.

மேலும் போராட்டத்தின்போது கலவரத்தை தூண்டினார் என இம்ரான்கான் மீதும் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதுதொடர்பான வழக்கு இஸ்லாமாபாத் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், “இம்ரான்கான் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு போதிய ஆதாரம் இல்லை“ எனத் தெரிவித்து அந்த வழக்கில் இருந்து அவரை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

இதேவேளை, ஊழல் வழக்கில் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ள இம்ரான்கான், அடியாலா சிறைச்சாலையில் சிறைதண்டனை அனுபவித்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். ஊடக அமையத்தினரின் ஏற்பாட்டில் நடேசனின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல்



(எஸ்.நிதர்ஷன்)

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பிரதான வீதி, நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு முன்பாக உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான பொது நினைவுத்தூபியில் நினைவேந்தல் நிகழ்வு யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமார் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் நினைவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டுப் பொதுச்சுடரேற்றப்பட்டது.

தொடர்ந்து ஒருநிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டு ஊடகவியலாளர்கள் மற்றும் யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவர்களால் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.


தொடர்ந்து ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் நினைவுரையும் இடம்பெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள், யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

2004 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி மட்டக்களப்பில் ஐயாத்துரை நடேசன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# ‘இலங்கை இதழியலில் சிவகுருநாதன்’ ஆஸியின் பேர்த்தில் இன்று வெளியீடு




மேற்கு ஆஸ்திரேலியா, பேர்த் மாநகரில் கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடக பணியை கௌரவிக்கும் முகமாக ‘இலங்கை இதழியலில் சிவகுருநாதன்’ எனும் நூல் இன்று முதலாம் திகதி வெளியிடப்படவுள்ளது.

“தினகரன்” முன்னாள் ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர். அவரது இருபதாம் ஆண்டு நினைவு நூலாக இது வெளியிடப்படவுள்ளது.

“தினகரன்” பத்திரிகையில் நீண்ட காலம் பிரதம ஆசிரியராக பணியாற்றிய, கலாசூரி இ.சிவகுருநாதன், மிக இலகுவான மொழியில் எல்லோருக்கும் புரியக் கூடிய வகையில் கருத்துக்களை சொல்வதில் அவருக்கு நிகர் அவரே. அவரின் நினைவாக இந்த நூல் வெளியீடு, 1 ஹில் வியூ பிளேஸ், பென்ட்லி, மேற்கு ஆஸ்திரேலியா என்னும் முகவரியல் அமைந்துள்ள ஹில்வியூ இன்டர்கல்ச்சுரல் கம்யூனிட்டி சென்டர் மண்டபத்தில், இன்று மாலை 3.30 முதல் 5.30 வரை நடைபெறும்.

மூத்த தமிழ் எழுத்தாளர், இலக்கிய ஆர்வலர் டாக்டர் அமீர் அலி தலைமையில் இந்த நூல் வெளியீடு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான நிலக்ஷன் ஸ்வர்ணராஜா நூலை அறிமுகம் செய்து சிறப்புரை வழங்குவார். அதன்பின் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான திருமதி ஜனனி சிவமைந்தன் இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் நூல் பற்றிய சிறப்புரை நிகழ்த்துவார்.

தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி பற்றி எடுத்தியம்பும் இந்த நூலின் சிறப்புரையை எழுத்தாளரும், நூலக ஆவணக் காப்பாளருமான கோபிநாத் தில்லைநாதன் ஆற்றுவார்.

“இலங்கை இதழியலில் சிவகுருநாதன்” எனும் நூலின் தொகுப்பாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா ஏற்புரையை வழங்குவார்.



# மக்கள் காங்கிரஸ் கட்சியில் றிஸ்லி முஸ்தபா சேர்ந்தார்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

முன்னாள் உயர்கல்வி பிரதி அமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபா அவர்களின் புதல்வர் றிஸ்லி முஸ்தபா தமது ஆதரவாளர்களுடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் இணைந்து கொள்ளும் சிறப்பு நிகழ்வு சாய்ந்தமருது பாபா றோயல் வரவேற்பு மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஐயுப்கான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுத்தீன் முன்னிலையில் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் மக்கள் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்றூப், அம்பாறை மாவட்ட மக்கள் காங்கிரஸ் கட்சியின் மாவட்ட



செயற்குழு தலைவர் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.எம்.அப்துல் றஸாக் (ஜவாத்), முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களாக எம்.ஐ.எம். மாஹிர், எம்.எஸ்.எம்.சுபைர் உட்பட கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தவிசாளர்கள், உயர் பீட உறுப்பினர்கள், உலமாக்கள், கல்விமான்கள், இளைஞர்கள் மாற்றும் றிஸ்லி முஸ்தபாவின் ஆதரவாளர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.










**1. உரலார் கேள்வி :- யாழ்ப்பாணத்தில் பெற்ற தாயின் கழுத்தில் மிதித்துக் கொன்ற பாதகன் பற்றி விவரம் அறிந்தீர்களா?**

**உலக்கையார் பதில் :-** விலங்குகள் கூடச் செய்யத் துணியாத காரியம். இக் காரியத்தைச் செய்தவன் புத்திசுவாதீனம் அற்றவன் என்று சொல்கிறார்கள். ஆயிரந்தான் புத்தி குழம்பியிருந்தாலும் இத்தகைய பாதகச் செயலை ஒருவனால் செய்ய முடியுமா? என்று எண்ணத் தோன்றுகிறது.

வெளிநாட்டு மோகம், போதைவஸ்துப் பாவனை, பணத்திமிர் என்பனவான பல சைத்தான்கள் போருக்குப் பின் யாழ்ப்பாணத்துக்குள் புகுந்திருக்கின்றன. அதனால் யாழ்ப்பாணம் சமநிலை கெட்டுப்போய் இருக்கிறது. அதனால் இன்னும் இப்படிப்பட்ட கொடூரமான செய்திகளை நாம் கேட்க வேண்டிவருமோ என அஞ்சுகிறேன்.

நம் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்வோருக்கு இது பற்றியெல்லாம் எந்தக் கவலையுமில்லை. ஒன்று யார் தலைவர் என்று அடிபடுகிறார்கள், அல்லது யார் பொது வேட்பாளர் என்று முட்டிக் கொள்கிறார்கள். நெஞ்சு பதறும் இத்தகைய செய்திகள் எல்லாம் அவர்களின் காதுகளுக்குள் நுழைவதில்லைப் போல் தெரிகிறது. அறம் கூற்றாகிறபோதுதான் இவர்களின் அரசியல் கூத்துகள் நிற்கும் என்று நினைக்கிறேன்.

**சல்லடையார் சலிப்பு :-**
**தலைக் கிடாய்கள் பிழைக்கிடாய்கள் ஆனால், சமூகம் இப்படித்தான் போகும் பாருங்கோ!**

✦✦✦✦✦✦✦✦✦✦

**2. உரலார் கேள்வி :- பட்டம்பெற்ற பலரும் வெளிநாடுகளுக்கு ஓடத் தொடங்கியிருக்கிறார்களாமே? என்னாகப் போகிறது நம் நாடு?**

**உலக்கையார் பதில் :-**யாழ். வைத்தியசாலை வைத்தியநிபுணர் ஒருவரை நேற்றுச் சந்திக்க நேர்ந்தது. டாக்டர்களின் வெளியேற்றம் பற்றிப் பதற்றத்தோடு அவர் பேசினார். இதே போக்கில் போனால் வைத்தியசாலை நிர்வாகம் ஸ்தம்பிக்க வேண்டி வரலாம் என்ற தனது அச்சத்தை வெளியிட்டார்.

பல விதத்தாலும் நம் மண் ஆபத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. அவற்றைத் தடுக்க வல்ல இரட்சகர்கள் ஒருவரையும் காணமுடியவில்லை. நானும் வாயோயாமல் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறேன். அதுபற்றி யாரும் கவலைப்படுவதாய்த் தெரியவில்லை.

ஒரு மருத்துவரை உருவாக்க அரசாங்கம் எவ்வளவோ பணம் செலவழிக்கின்றது. அது பற்றிய எந்த நன்றியுணர்வும் இல்லாமல் படித்து முடித்ததும் சொந்த மண்ணிற்கு 'டாட்டா' காட்டிவிட்டுப் பணம் சம்பாதிக்கவெனப் பல நாடுகளுக்கும் அவர்கள் பாய்ந்துவிடுகிறார்கள். இது எவ்வளவு பெரிய தவறு?

மண்ணிற்காக உயிர் துறந்த இளைஞர்களோடு, தியாக உணர்வும் நம் மண்ணை விட்டுப் போய் விட்டது போல் படுகிறது. உடல், பொருள், ஆவி என்ற அத்தனையையும் இனத்திற்காக இழந்து நின்ற இளையோரைக் கண்ட பிறகும் இவர்களால் எப்படித்தான் இப்படி நடக்க முடிகிறதோ? தெரியவில்லை. உண்மையில் இவர்கள் செய்வதும் தேசத்துரோகம் தான் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

'நன்றாற்றலிலும் தவறுண்டு அவரவர் பண்பறிந்து ஆற்றாக் கடை' என்றார் வள்ளுவர். தேசப்பற்றில்லாத இந்தப் புதிய தலைமுறைக்கு வரம்பிட வேண்டிய காலம் வந்துவிட்டதென்றே நினைக்கிறேன். இனி வரும் காலத்தில் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது நிபந்தனையாக, 'படித்து முடித்ததும் ஐந்து ஆண்டுகளுக்கு வெளிநாடு செல்ல மாட்டோம்!' எனும் உறுதி மொழியைச் சட்டபூர்வமாக வாங்க வேண்டும். அத்தோடு இவர்களுக்காகச் சொத்துக்கள் உள்ள இருவர் 'கரண்டி' தந்து கையெழுத்திடவேண்டும்.

அந்த ஐந்து ஆண்டுகளுக்குள் அவர்கள் இரகசியமாக வெளிநாடு செல்வார்களாயின் அவர்களுக்கு இருக்கக் கூடிய சொத்துகளையும், அவர்களுக்காகக் 'கரண்டி' கையெழுத்திட்டவர்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்ய வேண்டும். இப்படி ஏதாவது கடுமையான நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசிக்க வேண்டிய காலம் வந்து விட்டது என்றே கருதுகிறேன்.

**சல்லடையார் சலிப்பு :-**
**தேசம் மறந்திவர் மோசம் செய்கிறார்.**

✦✦✦✦✦✦✦✦✦✦

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

**3. உரலார் கேள்வி :- என்ன? ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது போலத் தெரிகிறதே?**

**உலக்கையார் பதில் :-** நம்மவர்களுக்குள் நடக்கும் சண்டைக்கு அப்பால் வெளிநாட்டுத் தூதுவர் பலரும் உட்புகுந்து 'செஸ்' விளையாடத் தொடங்கியிருக்கிறார்கள். எந்தக் காய் வெட்டுப்படப் போகிறதோ? யார் யாருக்குச் 'செக்' வைக்கப் போகிறார்களோ என்பதெல்லாம் இனி இனித்தான் தெரிய வரும்.


இந்த விளையாட்டிலாவது நம் தமிழ்த் தலைவர்கள் சரியான முறையில் காய் நகர்த்து வார்களா என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. இனப்பற்றைப் பற்றி வாய் கிழியப் பேசிவிட்டு இனத்தைப் படுகுழிக்குள் தள்ளுவதே இவர்களின் வேலையாய் இருப்பதால் பெரும்பாலும் அதற்கான வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது.

**சல்லடையார் சலிப்பு :-**

**பேரம் பேசத் தெரியாமல் வீரம் பேசினால் சோரம் போக வேண்டியதுதான். ஹி.ஹி.ஹி....!**

✦✦✦✦✦✦✦✦✦✦

**4. உரலார் கேள்வி :- முன்னாள் முதலமைச்சருக்காக ஒரு காலத்தில் உங்களோடு மோதிய 'வலம்புரி' பத்திரிகை ஆசிரியரே**



**இப்போது வெளிப்படையாக அவரைக் கண்டித்து ஆசிரியர் தலையங்கம் எழுதியிருக்கிறாராமே?**

**உலக்கையார் பதில் :-** இவர்கள் எல்லோரும் என்னை ஓர் தீர்க்கதரிசியாக உணர வைக்கிறார்கள். முதன் முதலில் மு.முதலமைச்சரின் போக்குச் சரியில்லை என்று நான்தான் எழுதினேன். அப்போதெல்லாம் பலரும் என்மேல் குற்றம் சாட்டினார்கள். காலம் அவர்களுக்கு அவரின் உண்மை முகத்தைக் காட்டியிருக்கிறது. இன்னும் கூட அவரிடம் ஏமாறத் தயாராய்ச் சிலபேர் இருக்கத்தான் செய்கிறார்கள். ஏமாளிகள்!

வலம்புரி ஆசிரியர் மொழிப்பற்று, சமயப்பற்று, தேசப்பற்று என்பவற்றில் உண்மைப்பற்றுக் கொண்டிருப்பவர். அதனால்தான் அவர் இந்த மனிதரிடம் ஏமாந்து போனார். நீதித்துறையில் இருப்பவர்கள் எல்லாம் உண்மையான நீதிமான்கள் இல்லையென்பதையும், விபூதி பூசியவர்கள் எல்லாம் உண்மைச் சமயவாதிகள் இல்லை என்பதையும், வேட்டி உடுத்தவர்களெல்லாம் உண்மைத் தமிழ்ப் பற்றாளர்கள் இல்லை என்பதனையும் இப்போதுதான் அவர் தெரிந்து கொண்டிருக்கிறார் என நினைக்கிறேன்.

அதுகூடத் தவறு! 'அரசியல் தொடர்பு படாமற்தான் இயங்குவோம்' என்ற இலட்சியத்துடன் இருந்த, 'தமிழ் மக்கள் பேரவையின்' கூட்டத்தில் வைத்தே என்றைக்குத் தனது கட்சியை மு.முதலமைச்சர் ஆரம்பித்தாரோ அன்றைக்கே வலம்புரியாருக்கு இவரது உண்மை முகம் விளங்கியிருக்கும். இன்றைக்குத்தான் அவரது மனக் கொந்தளிப்பு எழுத்தாய் வெடித்திருக்கிறது.

'தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்'தான் என்று பிடிவாதம் பிடிக்காமல், தான் தவறியதை ஒத்துக் கொண்டு, தான் உணர்ந்த உண்மையை உலகிற்குத் துணிவாய் அறிவித்து, 'வலம்புரியார்' தன்னை ஒரு நேர்மையான பத்திரிகையாளனாய் நிறுவியிருக்கிறார். அவருக்கு என் வாழ்த்துகள்!

**சல்லடையார் சலிப்பு :-**

**அதென்ன மு.முதலமைச்சர்? வாரிதியார் எதாவது குசும்பு விடுகிறாரோ?**

✦✦✦✦✦✦✦✦✦✦

**5. உரலார் கேள்வி :- மாண்புமிகு ஜனாதிபதி ரணிலின் யாழ்ப்பாண விஜயம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** நினைப்பதற்கு என்ன இருக்கிறது? தெற்கில் கிடைக்காது என்று தெரிந்த விடயத்தை வடக்கில் தேட முற்படுகிறார். வடக்கும் அவருக்குக் கைகொடுக்கும் என்று தோன்றவில்லை. இளைஞர்களைப் பாட்டுப்பாடவும் அனுமதித்து அவர் நடாத்திய கூட்டங்கள் தமிழ் மக்கள் நோக்கிப் போட்ட தூண்டில்கள். இங்கு அந்த முள்ளில் எந்த மீனும் சிக்கப் போவதில்லை என்றே படுகிறது.

ஆரைப்பிடித்தால் தன் காரியத்தைச் சாதிக்கலாம் என அறிந்து மு.முதலமைச்சரைச் சந்தித்திருக்கிறார். பாம்பின் கால் பாம்பறிவதில் என்ன விந்தை



இருக்கப்போகிறது? அவரும் இவருக்கான 'சிக்னல்' காட்டியிருக்கிறார்.

**சல்லடையார் சலிப்பு :-**

**சகுனியரின் கூட்டு சரி வராது பாருங்கோ!**

✦✦✦✦✦✦✦✦✦✦





# திருக்கோணேஸ்வரர் பெருமானுக்கு ஆயிரம் கிலோ எடை காண்டாமணி

## லண்டன் வாழ் சைவமக்களின் பங்களிப்புடன்

(எஸ்.கீதபொன்கலன்)

ஸ்ரீ மாதுமையம்பாள் உடனுறை திருக்கோணேஸ்வரர் பெருமான் திருத்தலத்திற்கு 1000 கிலோ எடை கொண்ட காண்டாமணி லண்டன் வாழ் சைவமக்களின் பங்களிப்புடன் நேற்று வழங்கிவைக்கப்பட்டது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனின் வேண்டுதலுக்கு அமையவும், திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையின் அனுமதியுடனும் இக்கைங்கரியம் லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது.

லண்டனில் வசிக்கும் ம. ஜெயசீலன், பா.சுரேசன் மற்றும் ச.லிங்கேஸ்வரன் ஆகியோர் தலைமைப் பொறுப்பேற்று, வெளிநாடுகளில் வசித்து வரும் ஈழ நாட்டினை பூர்வீகமாக கொண்ட சைவ அடியார்களின் நிதி பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட இந்த 1000 கிலோ நிறை கொண்ட காண்டாமணி நேற்றைய தினம் திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையினரிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்தில் தானாக இயங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இக் காண்டாமணி, மணிக் கோபுரம் அமைக்கப்பட்டு அதில் நிரந்தரமாக பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது.புதிய மணிக்கோபுரம் அமைப்பதற்கான அனுமதிக்கு, உரிய திணைக்களங்களிடம் திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை எழுத்து மூல கோரிக்கை விடுத்துள்ளது.







# பஸ்ஸில் பிரித்தானியப் பெண்ணின் பயணப்பொதியை திருடியவர் கைது

புறக்கோட்டை பஸ் நிலையத்தில் பஸ்ஸில் பிரித்தானியப் பெண் ஒருவரின் பயணப்பொதியை திருடிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொடையை சேர்ந்த 26 வயதான ஒருவரே கைது செய்யப்பட் டுள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி திருடப்பட்ட பயணப்பொதியில் இருந்த மடிக்கணினி, கமரா உள்ளிட்ட பெறுமதியான பொருள் களை சந்தேகநபர் பல்வேறு நபர்க ளுக்கு விற்பனை செய்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், பையில் இருந்த 20 ஆயிரம் அமெரிக்க டொலர் பணத்தை யும் சந்தேகநபர் திருடியுள்ளார்.

சந்தேகநபரை புதுக்கடை நீதவான் நீதிமன்றில் முன்னி லைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பொருள்களை கொள்வனவு செய்துள்ள நபர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர்.





# புகைத்தல் தடுப்பு தினத்தை ஒட்டி மன்னாரில் விழிப்புணர்வு நிகழ்வு

(த.சுபேசன்)

சர்வதேச புகைத்தல் தடுப்பு தினத்தை முன்னிட்டு நேற்றய் வெள்ளிக்கிழமை ‘புகையிலை நிறுவனங்களின் தந்தி ரோபாயங்களிலிருந்து சிறுவர்களையும், இளைஞர்களையும் பாதுகாப்போம்’ எனும் தொனிப்பொருளில் மன்னார் மாவட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இதன்போது கடைத் தொகுதிகள், பஸ் தரிப்பிடங்க மற்றும் ஓட்டோ தரிப் பிடங்களில் விழிப்புணர்வுச் சுவரொட் டிகள் ஒட்டப்பட்டன. மக்கள் மத்தியில் புரிதல் நிலையை ஏற்படுத்தும் வகை யில் விழிப்புணர்வு செயற்பாடுகள் மற்றும் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றனவும் விநி யோகிக் கப்பட்டன. விழிப்புணர்வு நிகழ்வில் வை.ஏ.என் ஸ்ரீலங்கா அமைப் பின் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெருஷன், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சமூக செயற் பாட்டாளர்கள் மற்றும் இளைஞர்கள் இணைந்து அதனை முன்னெடுத்திருந் தமை குறிப்பிடத்தக்கது.





# விக்டோரியா நீர்த்தேக்கத்தில் இருந்து அழுகிய நிலையில் 2 சடலங்கள் மீட்பு

விக்டோரியா நீர்த்தேக்கத்தில் இருந்து இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கிடைத்த தகவலுக்கமைய திகண, அம்பகோட்டே பகுதியில் இருந்து இரு சடலங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை அடையாளம் காண முடியாத அளவிற்கு அழுகிப் போயுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெல்தெனிய பதில் நீதிவான் சம்பவ இடத்திற்கு சென்று சடலங்களை பார்வையிட்டுள்ளார். பிரேத பரிசோத னைகளுக்காக சடலங்கள் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில், தெல்தெனிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தேர்தல்களில் தலையிடுவது ஜனநாயகத்தை நசுக்கும் சர்வாதிகார முயற்சி என சட்டத்தரணிகள் கண்டனம்

நීතිඥ සාමූහිකය
சட்டத்தரணிகள் ஒன்றிணைவு
Lawyers' Collective

மக்களின் அபிலாஷைகள், விருப்பங்களை வெளிப்படுத்தும் அடிப்படை உரிமையான ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தலையிடுவது ஜனநாயகத்தை நசுக்கும் சர்வாதிகார முயற்சி என சட்டத்தரணிகள் ஒன்றிணைவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அல்லது நாடாளுமன்றத்தின் கொள்கைகளை அங்கீகரிப்பது அல்லது நிராகரிப்பதே ஜனநாயகம் என அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தலை ஒத்திவைக்கும் முன்மொழிவுகள் தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்தும் வகையில், சட்டத்தரணிகள் ஒன்றிணைவு அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான உபுல் ஜயசூரிய, கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன, டினால் பிலிப்ஸ், சாலிய பீரிஸ், எஸ்.டி. ஜயங்க, உபுல் குமாரப்பெரும, பேராசிரியர் தீபிகா உடுகம உள்ளிட்ட சட்டவல்லுநர்கள், சட்டத்தரணிகள் ஒன்றிணைவில் அங்கம் வகிக்கின்றனர்.

மூன்றில் இரண்டு அதிகாரத்தைக் கொண்டிருந்த நாடாளுமன்றம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை முற்றாகத் தகர்க்கப்பட்டுள்ளதை போராட்டத்தின் மூலம் மக்கள் உறுதிப்படுத்தியுள்ளனர் என அவர்கள் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில், ஆட்சிக்கு வந்த தற்போதைய ஜனாதிபதி ஜனநாயகத்தை பாதுகாத்து மக்களின் இறையாண்மைக்கு அடிபணிய கடமைப்பட்டுள்ளார் என சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணிகள் ஒன்றிணைவு, நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம் உள்ளிட்ட அரச கட்டமைப்புக்கு சட்டபூர்வமான தன்மையை மீளப்பெற்றுக் கொடுப்பது அவரது பிரதான பணியாக இருந்திருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

ஆனால், அதற்கு பதிலாக, 2023 உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த மறுத்த ஜனாதிபதி, சட்டப்பூர்வத்தன்மையை இழந்த நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடன் அடக்குமுறை, சர்வாதிகார நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்தி வருவதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 30/2 பிரிவின்படி, ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் எனவும் அரசமைப்பின் 62/2 பிரிவின் கீழ் நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் என்பதனையும் சட்டத்தரணிகள் ஒன்றிணைவு தமது அறிக்கையில் நினைவுபடுத்தியுள்ளது.

அந்த காலவரையறையை மாற்றுவதற்கு அரமைப்பில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் எனவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது அரசமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பை மாற்றுவதற்கான திருத்தம் என்பதால், அதற்கு நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்கு, சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் எனவும் சட்டத்தரணிகள் ஒன்றிணைவு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான பின்னணியில் தேர்தலை ஒத்திவைக்கும் முன்மொழிவுகள் மக்களின் இறையாண்மையை முற்றாக இழிவுபடுத்துவதாகவும், அது திட்டமிட்டு அரசமைப்பை புறக்கணிக்கும் விடயம் எனவும் சட்டத்தரணிகள் ஒன்றிணைவு மேலும் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் 50 வீத வாக்குடன் இன்னும் ஒரு வாக்கு மேலதிகமாக பெறுவதன் மூலம் அரசமைப்பில் அனைத்து திருத்தங்களையும் மேற்கொள்ள முடியுமா என கேள்வி எழுப்பும் சட்டத்தரணிகள் ஒன்றிணைவு, 'அரசமைப்பு அறநெறி' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அரசமைப்பு திருத்தச் செயன்முறை நிர்வகிக்கப்படுகிறதா என்ற கேள்வி எழுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

# 1,700 ரூபா சம்பளம் தொடர்பான வழக்கு ஜூன் மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 1,700 ரூபா சம்பளம் தொடர்பான வழக்கு எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சோபித்த ராஜகருணா, தம்மிக்க கனேபொல ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என கடந்த 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியை வலுவற்றதாக்கி, எழுத்தாணைக் கட்டளை பிறப்பிக்குமாறு கோரி, 21 பெருந்தோட்ட நிறுவனங்கள் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளன.

பெருந்தோட்ட கம்பனிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமெஷ் டி சில்வாவும், தொழிற்சங்கங்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபாவும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை செயற்படுத்தினால், தற்போது நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் முழுமையாக செயலிழக்கும் நிலை உருவாகும் என மனுதாரர்கள் மன்றில் சுட்டிக்காட்டினர்.



பெருந்தோட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடாமல் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளமையால், அதனை செல்லுபடியற்றதாக்குமாறு மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்கார, அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்டவர்கள் மற்றும் நிறுவனங்கள் அடங்கலாக 52 தரப்பினர் இந்த வழக்கின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.



# நாட்டைச் சூழ கடற்பிராந்தியம் கொந்தளிப்பாகவே இருக்குமாம்

மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா மாவட்டத்திலும் 50 மில்லிமீட்டருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகுமென வளிமண்டல வியல் திணைக்களம் எதிர்வுகூறி யுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களிலும் இடைக் கிடையே மழை பெய்யுமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் பருவப்பெயர்ச்சி நிலைமை காரணமாக மழையுடனான வானிலை தொடர்ந்து நீடிக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டைச் சூழவுள்ள கடற்பிராந்தியங்கள் கொந்தளிப்பாக இருக்குமென தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதனால், மன்னார் முதல் கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தி யங்களுக்கு மறு அறிவித்தல் வரையில் செல்ல வேண்டாமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.





ஊடகவியலாளர் அமரர் ஐயாத்துரை நடேசன்
Late Journalist Aiyathurai Nadesan

# நடேசன் நினைவேந்தல் திருகோணமலையிலும்

(ஹஸ்பர் ஏ.எச்)

மட்டக்களப்பில் படுகொலைசெய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை 31ஆம் திகதி திருகோணமலை கடற்கரையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது. இதில் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள்,ஊடகவிய லாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.









# வடமராட்சி ஊடக இல்லத்திலும் நடேசனின் நினைவேந்தல் நேற்று

மட்டக்களப்பில் வைத்து இனந்தெரி யாத நபர்களால் சுட்டு படுகொலை செய்யப்பட்ட மூத்த ஊடகவியாளரும் நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசனின் 20 ஆவது ஆண்டு நினை வேந்தல் நேற்று யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்றது.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத் தலைவர் கு.மகாலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நினைவு தின நிகழ்வு அக வணக்கத்துடன் ஆரம்பமானது.

நடேசனின் திருவுருவப்படத்திற்கான ஈகைச்சுடரினை மூத்த ஊடகவியாளர் சி.தில்லைநாதன் ஏற்றிவைத்தார். மலர் மாலைய்சி ஊடக இல்லத் தலைவர் மகாலிங்கம் அணிவித்தார். தொடர்ந்து வடமராட்சி ஊடக இல்லத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தினர்.













# கிரேக்க பிணை முறி வழக்கில் இருந்து அஜித் நிவாட் உள்ளிட்ட ஐவர் விடுதலை



கிரேக்க பிணை முறி தொடர்பான வழக்கில் இருந்து மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட 5 பிரதிவாதிகளும் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

2012 இல் கிரேக்கத்தின் பிணை முறிகளில் முதலீடு செய்து, அரசாங்கத் திற்கு 1.84 பில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தினர் என குற்றஞ்சாட்டப்பட்டு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பில் முன்வைக் கப்பட்ட அடிப்படை ஆட்சேபனைகளை கருத்தில் கொண்டு அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட 5 பிரதிவாதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் உயர் நீதி மன்றத்தின் தீர்மானம் பெற்றுக் கொடுக்கப்பட்டு 10 வருடங்கள் கழித்து, இந்த வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளதாக பிரதிவாதி தரப்பு சுட்டிக்காட்டியது.

இதேவேளை, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாய கம் நியமிக்கப்படுவதற்கு முன்னர் குற்றப்பத்திரிகையில் கையொப்பமிட் டுள்ளதாக பிரதிவாதி சட்டத்தரணிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

இந்த விடயங்களை ஆராய்ந்த கொழும்பு மேல் நீதிமன்றம் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட 5 பிரதிவாதி களை விடுவித்து உத்தரவிட்டுள்ளது.







# மட்டுவில் ஆதரவற்ற பிள்ளைகளை அரவணைக்கும் சக்தி மகளிர் இல்லம்

**(மட்டக்களப்பு சக்தி மகளிர் இல்லம் 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நிலையில் இந்தக் கட்டுரை பிரசுரம் செய்யப்படுகிறது)**

மட்டக்களப்பு சக்தி மகளிர் இல்லம் தாய், தந்தையரை இழந்த பிள்ளைகள், வறுமையால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள், கல்வி கற்கும் சூழல் இல்லாத பிள்ளைகளுக்காக செயற்படும் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமாக பங்காரு அம்மாவின் ஆணைப்படி சுவிஸில் வசிக்கும் யாழ்ப்பாணம் அச்சுவேலியைச் சேர்ந்த மாமனிதன் தம்பிப்பிள்ளை உதயதாஸின் செயல்வடிவில் தோன்றிய அழகிய இல்லமாகும்.

1999.03.03 ஆம் நாள் குழந்தையாக பிரசவிக்கப்பட்ட இந்த இல்லம் 25 ஆவது அகவை தன்னில் கால் பதித்துள்ளது.

பங்காரு அம்மாவின் அருள் வாக்குக்கு இணங்க ஆன்மீக உணர்வோடு இயங்கி வருகின்ற ஒரு இல்லம் ஆகும். இது தனது சொந்தப் பணத்தில் காணி வாங்கி அழகான பல வீடுகளாக அமைத்து பிள்ளைகள் யாவரும் தங்களது வீடுகளில் இருப்பது போன்ற உணர்வுடன் சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதற்காக வீடு, வீடாக அமைக்கப்பட்டது.

இதற்கு அவரது பிள்ளைகள் வராகி இல்லம், பிரகிருதி இல்லம், வைதாரணி இல்லம் என்று பெயர் வைத்து அழகு பெற்று விளங்குகின்றது. இல்லத்தை அமைக்க அவரது இல்லாள் துணை நின்றாள். சுவிஸ்வாழ் சில நண்பர்கள் தோள் கொடுத்தனர். (கனகலிங்கம் சிவகுமாரன், தங்கராஜா வாசுதேவன், கந்தசாமி மகாவலி, சின்னப்பு யோகராஜா, முத்துக்குமாரசாமி சதீஸ்குமார், வேலுப்பிள்ளை ராஜலிங்கம், பாலகிருஸ்ணன்.)

மேலும் இல்லத்தின் ஆரம்ப காலம் முதல் இன்று வரை எங்களுடன் பயணித்து இல்லத்துக்காகப் பல சேவை செய்து கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாலபத்மனின் சேவை இல்லம் உள்ள வரை நிலைத்து நிற்கும்.

இந்த வள்ளலை வாயார வாழ்த்தாமல் இருக்க முடியாது. மட்டக்களப்பு பிரதேசத்தில் 500 இற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்குக் கல்வி, பாதுகாப்பு, அன்பு, அரவணைப்பு கொடுத்து நின்ற கர்ணன்தான் உதயதாஸ்.

இந்த இல்லத்தில் கல்வி கற்ற மாணவர்கள் யாவரும் பங்காரு அம்மாவின் செவ்வாடை பிள்ளைகளாக வாழ்ந்து, அடுத்தவர்களுக்கு வழிகாட்டியாக வாழ்வதற்கு முன்மாதிரியே இந்த உதயதாஸின் தூய சிந்தனை. அம்மாவின் அருள்வாக்குக்கு அடி பணிந்து அமைக்கப்பட்டதுதான் இந்த சக்தி இல்லம்.

மாமனிதன் உதயதாஸின் வழிகாட்டலிலும், உதவியிலும் பிரதேச வாழ் நலன் விரும்பிகளதும், செவ்வாடைத் தொண்டர்களதும், மேலும் இந்து கலாசார திணைக்களம், சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் என்பன வழங்கும் கொடுப்பனவுகளும், நலன் விரும்பிகள், செவ்வாடைத் தொண்டர்கள் தாமாக முன்வந்து பணமாகவும் பொருளாகவும் செய்யும் உதவிகள் என்பன இல்லப் பிள்ளைகள் பராமரிப்புக்கு மேலும்

தொடர்ச்சி▼





# மட்டுவில் ஆதரவற்ற பிள்ளைகளை அரவணைக்கும் சக்தி மகளிர் இல்லம்

தொடர்ச்சி▲

பேருதவியாக உள்ளன.

இவர்களின் உதவி கொண்டு எமது இல்லம் காலத்தால் அழியாத கல்வியையும் ஒழுக்கத்தையும், பாதுகாப்பையும், ஆன்மிக உணர்வுகளையும் வழங்குவதற்காக அரும்பாடுபட்டு வருகின்றது. இங்கு வாழும் பிள்ளைகள் யாவரும் சலித்தவர்கள் அல்ல என்பதற்கு எடுத்துக்காட்டாக நிற்கின்றனர்.

இந்த இல்லத்தின் சேவையை அறிந்த பலர் உதவ முன்வந்து கொண்டு இருக்கின்றார்கள். அவர்களின் உதவி இல்லத்துக்கு வரப்பிரசாதமாகும். இந்த இல்லத்தின் தேவைகளுக்கான பெரும் உதவிகளை மனம் கோணாது அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்றார் எமது சக்தி இல்லப் பணிப்பாளர் த.உதயதாஸ். இல்லத்தின் தேவையை பூர்த்தி செய்வதற்காக இல்ல நிர்வாகம் பல்வேறு வகைகளிலும் பெரும் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றது. மற்றும் அன்று முதல் இன்றுவரை நிர்வாகத்தோடு இணைந்து இங்கு வேலை செய்யும் ஊழியர்களும் அர்ப்பணிப்பு உடையவர்களாகவும், சேவை மனப்பாங்கு உடையவர்களாக செயற்பட்டு இல்ல வளர்ச்சியில் தங்கள் பங்களிப்பை வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

இல்லத்தோடு அமைந்த காணியின் ஏனைய பகுதிகளில் 500 இற்க்கு மேற்பட்ட தென்னங்கன்றுகளை வைத்து பராமரிப்பதற்காக வழியமைத்துத் தந்தார் பணிப்பாளர். இதன் நோக்கம் எதிர்காலம் தென்னையால் பெறப்படும் வருமானம் இல்லத்துக்குப் பயன்பட வேண்டும் என்பதே. அதன் மூலம் பெறப்படும் தேங்காய் இல்லத்தின் தேவைக்காகப் பயன்படுகின்றது. மேலதிக தேங்காய்கள் விற்கப்படுவதும் உண்டு. அவைவிற்கப்பட்டுப்பணமாகப்பயன்படுத்தப்படுகின்றது. அதன் மூலம் பெறப்படும் விறகுகளும் இல்லத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இத் தென்னந்தோட்டத்தில் ஒரு குடும்பத்துக்குத் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இன்று இல்லம் காணப்படும் இந்த இடம் அன்று மரம், செடி, கொடி, பற்றை நிறைந்த காடு போன்று காணப்பட்டது. அன்று பல நல்ல உள்ளங்களின் உடல் உழைப்பும், வியர்வையும், அர்ப்பணிப்பும், சேவை மனப்பாங்கும் எத்தனையோ இடர்களைத் தாண்டிச் செய்த சேவைகள் அளப்பெரியவை. அவர்களுக்கு நன்றி என்ற வார்த்தை பொருத்தமற்றவை. இவர்கள் இல்லத்தின் மறக்க முடியாத சிற்பிகள் எனலாம். அவ்வண்ணமே இன்றுவரையும் அது போன்ற இன்னும் பல நல்ல உள்ளங்களின் சேவையும், அர்ப்பணிப்பாலும் இன்றுவரை இந்த இல்லம் சிறப்பாக இயங்கி வருகின்றது.

இன்று இந்த இல்ல வளாகத்தை சுற்றிலும் மதிற்சுவர், 10 கட்டடங்கள், கண்காணிப்பு கருவிகள் வளாகம் பூராகவும் பூட்டப்பட்டுள்ளன. சமையல் கூடம், உணவருந்தும் கூடம், விடுதிகள், கல்விக்கூடம், அன்னதானக் கூடம்,வழிபாட்டுக்காக வழிபாட்டு மண்டபம், விருந்தினர் தங்குவதற்காக விருந்தினர் வீடு, மலசலகூடம், பெற்றோர் பிள்ளைகளை சந்திக்கும் இடம், குளியலறை, விளையாட்டு முற்றம், நூலக வசதி எனப் பல வசதிகளை கொண்டு இந்த இல்லம் செயற்பட்டு வருகின்றது.

சந்தோசமாகப் பொழுதைக் கழிக்க தொலைக்காட்சி இணைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டட அமைப்பு இல்ல வளாகத்தில் சிறுவர் பூங்கா வண்ண வண்ண மலர்களுடனான பூஞ்சோலைகள் பார்ப்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும் வகையில் ஒரு ஆச்சிரமத்துக்குள் நுழையும் உணர்வு ஏற்படும் வண்ணம் உள்ளது. இந்தக் கட்டட அமைப்பு சா.ரவீந்திரனின் கலை வண்ணம் எனலாம்.

இங்கு வாழும் இல்லப் பிள்ளைகள் மட்டக்களப்பு பட்டிருப்பு ம.ம.வி தேசிய பாடசாலையிலும் களுவாஞ்சிகுடி விநாயகர் வித் தியாலத்தில் கல்வி பயில்கின்றனர். இவர்களது கல்வி நடவடிக்கைகளுக்கும் மேலதிக வகுப்புகள் இல்ல வளாகத்திலேயே ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. க.பொ.த. உயர்தர மாணவர்கள் ஹிமாலயா கல்வி நிலையத்துக்குச் சென்று கல்வி கற்கின்றனர். அந்தக் கல்வி நிறுவனங்கள் 50 வீதக் கழிவுடன் மேலதிக வகுப்புகளுக்கு உதவுகின்றன என்பது பெருமைக்குரியதும் பாராட்டத்

தொடர்ச்சி▼



# மட்டுவில் ஆதரவற்ற பிள்ளைகளை அரவணைக்கும் சக்தி மகளிர் இல்லம்

தொடர்ச்சி▲

தக்கதுமாகும்.

பட்டிருப்பு தேசிய பாடசாலை எங்கள் மாணவர்களின் விளையாட்டு திறன்களை இனம் கண்டு அவர்களை ஊக்குவிக்கின்றது. இல்லத்தின் பராமரிப்பில் இருந்து கல்வி கற்று வெளியேறிய பிள் ளைகளில் 32 பேர்வரை பல்கலைக்கழகத்துக்கும் 03 பேர் கல்வியியல் கல்லூ ரிக்கும் 13 பேர் வெளிவாரி பட்டதாரிகளாகவும் உள்ளனர். 04 பேர் தாதி பயிற்சி பெறுகின்றனர். 09 பேர் உயர்தரத்துடன் தொழில் புரிகின்றனர். 20 பேர் பட்டதாரிகளாகத் தொழில் புரிகின்றனர். தற்போது தொழிலை எதிர்பார்த்துப் 14 பேர் உள்ளனர்.

பிள்ளைகள் நாடகம், விளையாட்டுப்போட்டி என அனைத்து போட்டிகளிலும் பங்கு பற்றி வெற்றிகளை மாவட்ட, மாகாண மட்டத்தில் பெற்று இல்லத்துக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளனர். எமது இல்லத்தில் இருந்து கல்வி கற்ற பழைய மாணவர்கள் 2012 இற்குப் பிற்பட்டவர்கள் இணைந்து சக்தி இல்ல விழுதுகள் என குழு அமைத்து வழிகாட்டிய பங்காரு அம்மாவின் ஆன்மிக வழியில் பிறரின் கஷ்டத்தை இணங்கண்டு உதவும் பிள்ளைகளாகச் செயற்படுவதும் பெருமைக்கு உரிய விடயமாகும்.

இது சக்தி இல்லத்தில் வளர்ந்த பிள்ளைகளால் சக்தி இல்லத்துக்குப் பெருமை சேர்க்கின்றது. மார்பு தட்டி சக்தி இல்லத்தில் வளர்ந்த பிள்ளைகள் என்று பெருமையாக வெளியில் சொல்கின்றனர். இது சக்தி இல்லத்துக்குச் சிகரமாக அமைகின்றது.

அன்று முதல் இன்றுவரை பங்காரு அம்மாவின் ஆன்மிகம் வழிபாடு என்பவற்றுடன் ஒன்றிணைந்து வளர்ந்தவர்கள்தான் சக்தி இல்லப் பிள்ளைகள் ஆன்மிக உரை, வேள்வி முறைகள், மாலை கட்டுதல், தியானம் பண்ணுதல், கோலம் போடுதல், கலசங்களுக்கு நூல் சுற்றுதல், திருஷ்டி முறைகள், பேச்சாளர் என பல வகைகளிலும் பல ஆன்மிக வழியைப் பின்பற்றும் பிள்ளைகளாக வளர்ந்து வருகின்றனர்.

கிழக்கு மண்ணில் உள்ள மக்கள் யாவரும் அன்னை ஆதிபராசக்தியின் அருளும் ஆசியும் பெற அழகுற அமைந்ததுதான் மன்றம். பங்காரு அம்மாவின் ஆன்மிகம் கிழக்கு மண்ணில் பரவ வழிகாட்டியாக நின்றார் பணிப்பாளர்.

சுனாமி முதல் கொரோனாவரை எத்தனையோ பிரதேசங்களில் எத்தனையோ மக்களுக்கு உலர் உணவு உதவி, வீடு, சைக்கிள், சுயதொழில் ஏற்பாடுகள் எனவும் கல்விக்காக பல பாடசாலைகளுக்கும் கல்வி உபகரணங்கள் வழங்குவதற்கு வழியமைத் து அந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல உதவினார். அந்த வகையில் இந்த உதவிகளுக்குத் துணை நின்றவர் என்ற வகையில் பணிப்பாளர் அவர்களின் தம்பியான காலம்சென்ற தம்பிப்பிள்ளை விஜயதாஸை நினைவு கூறக் கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் சக்தி மகளிர் இல்லத்துக்கு அருகில் அமைந்துள்ள நந்தவனம் முதியோர் இல்லத்துக்கும் பல உதவிகளை எமது பணிப்பாளர் செய்து வருகின்றார்.

நிர்வாகம் ஒற்றுமையாக ஒன்றிணைந்து செயற்படக் கூடியதான அங்கத்தவர்கள் இல்லத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றார்கள். அந்தவகையில் இல்லத்தின் செயற்பாடுகளில் ஒன்றிணைந்து நீண்ட காலம் சேவையாற்றி இறந்தவர்களான திருமதி அரசகேசரி, இராஜேஸ்வரி, மகேந்திரன் ஆகியோர் இன்று உயிருடன் இல்லாத போதும் அவர்களது சேவை அகவை இருபத்தைந்திலும் பேசப்பட்டுக் கொண் டிருக்கின்றது.

இங்கு உள்ள பிள்ளைகள் ஒழுக்கம், பிறருக்கு மதிப்பு அளிக்கும் பிள்ளைகளாகவும், நன்றியுணர்வு உள்ள பிள்ளைகளாக இருப்பதோடு இல்லம், மன்றம் தோட்டச் செயற்பாடுகளில் ஒன்றினைந்து தங்களால் முடிந்த பங்களிப்புக்களை மனம் கோணாது செய்து இல்லத்தின் வளர்ச்சியில் பங்களிப்பு செய்கின்றார்கள்

இல்லத்தின் சிறப்புகளை அடுத்த சமுகம் பார்க்கும் என்ற உறுதியான ஆதங்கத்தை வெளிப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் கைகளில் தவழும் இந்த மலர் இல்லத்தின் வரலாற்று சாதனைகளை வெளிக்கொணரும் ஒரு ஆவணப் பதிவாக இருக்க என் வாழ்த்துகள்.

“நமக்கு பிறகு யார் ,தற்கு தண்ணீர் ஊற்றப் போகி றார்கள் என்று எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் சிலர் தென்னைக்கும், வாழைக்கும் நீர் ஊற்றி வளர்க் கிறார்கள். அதுபோல தர்மத்தையும் பலனை எதிர்பார்க் காமல் செய்து கொண்டே இருக்க வேண்டும்.” – அன்னையின் அருள்வாக்கு.

**செல்வி சிவகுணம் ஜீவமணி,**
**ஓய்வு நிலை ஆசிரியர்,**
**முகாமையாளர்,**
**சக்தி மகளிர் இல்லம்.**



# உலக வரலாற்றில் எரித்து அழிக்கப்பட்ட நூலகங்கள்

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா.

**(தமிழ் மக்களின் அரிய சொத்தான யாழ். நூலகம் 1981 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதி தீக்கிரையாக்கப்பட்டது. அதன் நினைவாக இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது.)**

ஒரு இனத்தை அழிக்குமுன் அதன் சுவடுகளை அழி, அடையாளத்தை அழி என்பார்கள். அதற்கு சான்றாகவே உலக வரலாற்றில் பல நூலகங்கள் எரிக்கப்பட்டுள்ளன. வரலாற்று ரீதியில் யுத்தங்கள் எவ்வகையான கொடுமைகளைக் கொண்டிருந்த போதும் அறிவு மையங்களின் அழிவு என்பது எப்போதுமே தவிர்க்கப்பட வேண்டிதொன்றாகும். இதனையே ஐ.நாவின் போர் விதிகளும் அழுத்தமாக வலியுறுத்துகின்றன.

ஆயினும் போர்க் களங்களில் உண்மை முதலாவது பலியாவது போல, எதிர்கால சந்ததியின் அறிவியல் வளத்தை அழிக்க எதிரிகள் முனைவர். ஒரு நூலகத்தின் அழிவானது மனிதகுல வளர்ச்சியை சில நூற்றாண்டுகளுக்கே பின்தள்ளி விடும் அபாயங் கொண்டவையாகும். எதிர்காலத் தலைமுறையினருக்கான பேரறிவுப் பெட்டகங்கள் அறிவியல் நூலகங்களிலேயே பேணப்படுகின்றன. இதனாலேயே எதிரிகள் எப்போதும் நூலகங்களை அழிப்பதில் முனைப்பாயிருந்ததை வரலாற்று ரீதியாக நாம் காணலாம்.

### ஆறு மாதங்கள் எரிந்த அலெக்ஸாண்டிரியா

அலெக்ஸாண்டிரியாவின் பழமையான நூலகம் (library of Alexandria) பல கல்வியாளர்கள் மற்றும் அறிஞர்களை உருவாக்கிய நகரமாக மிளிர்ந்து அலெக்ஸாண்டிரியாவின் நற்பெயர் வளர்ந்தது. உலக வரலாற்றின் ஆரம்பத்தில் இந்த நூலகத்தில் இருந்த அறிஞர்களிடமிருந்து பல முக்கியமான படைப்புகள் வெளிவந்தன.

எகிப்தின் அலெக்ஸாண்டிரியாவில் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு பகுதியாக இருந்த இந்த நூலகம் வரலாற்றில் மனித அறிவின் மிகப்பெரிய களஞ்சியமாக இருந்தது. இன்று உலக அறிஞர்கள் பயன்படுத்தும் பல கிரேக்க, ரோமானிய படைப்புகள் மற்றும் நூல்கள் அலெக்ஸாண்டிரியாவில் உருவாகின.

1,000 ஆண்டுகால வரலாற்றில், நூலகம் பலமுறை எரிக்கப்பட்டது. கி.பி. 640 இல் அலெக்ஸாண்டிரியா முஸ்லீம் ஆட்சியின் கீழ் வந்தபோது மீண்டும் எரிக்கப்பட்டது. முஸ்லீம் ஆட்சியாளர் கலிஃப் உமர், இஸ்லாமிய மதங்களுக்கு எதிரான, அல்லது மிதமிஞ்சிய நூல்கள் என்று வலியுறுத்தி பல நூல்கள் எரிக்கப்பட்டுள்ளன.

நூலகத்தின் அனைத்து பொருள்களும் எரிவதற்கு ஆறு மாதங்கள் ஆனதாகக் கூறப்படுகிறது. தற்போதய நவீன அலெக்ஸாண்டிரியா ஒரு பரபரப்பான பெரு நகரமாக வளர்ச்சி பெற்றுள்ளது. அத்துடன் கடந்த 2,000 ஆண்டுகளாக ஆக்கிரமிப்பு சின்னங்களைப் பராமரித்து வருகிறது. அலெக்ஸாண்ட்ரியா நூலகத்தின் அழிவு, பண்டைய நாகரிக அழிவை வெளிப்படுத்துகிறது.

### துருக்கி படையெடுப்பால் அழிந்த இந்திய நாலந்தா நூலகம்

நாலந்தா (Nalanda university library) இந்தியாவின் இரண்டாவது பழமையான பல்கலைக் கழகமாகும். 14 ஹெக்டேர் பரப்பளவில் பரவியுள்ள இந்த பல்கலைக் கழகம், ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து 1193 வரை, திபெத், சீனா, கிரேக்கம் மற்றும் ஈரான் போன்ற நாட்டு மாணவர்களின் முதன்மையான கற்றல் இடமாக இருந்தது.

ஐந்தாம் நூற்றாண்டில் குப்தர்கள் பல்கலைக்கழக கல்வியை ஆதரித்து, நாலந்தா பல்கலைக்கழகத்தை நிறுவ வழிவகுத்தனர். நாலந்தா உட்பட பண்டைய இந்தியப் பல்கலைக்கழகங்கள் அனைத்தும் வேதக் கற்றலின் மிகவும் முறைப்படுத்தப்பட்ட முறைகளைப் பின்பற்றின.

அக்காலத்திலேயே உலகம் முழுவதிலும் இருந்து மாணவர்கள் மேற்படிப்புக்காக இங்கு சேர்ந்து கல்வி கற்றனர். நாலந்தா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கட்டடங்களைக் கட்டுவதற்கு வெளிநாட்டு மன்னர்கள் நன்கொடை அளித்ததற்கான சான்றுகள் பலவும் உள்ளன.

இந்தோனேசியாவின் ஷைலேந்திர மன்னன் ஒரு கட்டடத்தை வளாகத்துக்குள் கட்டியதற்கான தொல் பொருள் சான்றுகள் உள்ளன. நாலந்தா பல்கலைக் கழகம் ஒரு குடியிருப்புக் கற்றல் இடமாக இருந்தது.

தொடர்ச்சி▼



# உலக வரலாற்றில் எரித்து அழிக்கப்பட்ட நூலகங்கள்

தொடர்ச்சி▲

இந்த வளாகத்தில் பத்து கோயில்கள், வகுப்பறைகள், தியான மண்டபங்கள், மடங்கள், தங்குமிடங்கள், ஏரிகள் மற்றும் பூங்காக்கள் என வளாகம் எங்கும் பரவி இருந்தது. இந்தப் பல்கலைக்கழகம் 10,000 மாணவர்கள் மற்றும் 2,000 ஆசிரியர்களுக்கு இடமளித்தது.

கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த யாத்ரீக துறவிகள் மற்றும் பிற வரலாற்று ஆசிரியர்களின் தரவுகளின்படி, நாலந்தா பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத்தில் மகாயான பௌத்தம், வேதங்கள், தர்க்கம், சமஸ்கிருத இலக்கணம், மருத்துவம் ஆகிய துறைகளில் பல பாடங்கள் போதிக்கப்பட்டன.

இவ்வாறு சிறந்து விளங்கிய நாலந்தா பல்கலைக் கழகத்தை, 1193 ஆம் ஆண்டு பக்தியார் கில்ஜியின் கீழ் துருக்கிய படையெடுப்பாளர்களால் முழுமையாக சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டது. அத்துடன் நாலந்தா பல்கலைக்கழகத்தின் பெரிய நூலகம் அழிக்கப்பட்டது

அந்த நூலகத்தில் ஒன்பது மில்லியனுக்கும் அதிக மான கையெழுத்துப் பிரதிகள் இருந்ததாகக் கூறப்ப டுகிறது. பாரம்பரிய திபெத்திய ஆதாரங்களின்படி, நாலந்தா பல்கலைக்கழகத்தில் உள்ள நூலகம் மூன்று பெரிய பல மாடிக் கட்டடங்களில் இருந்தது. இந்தக் கட்டடங்களில் ஒன்று ஒன்பது மாடிகளைக் கொண்டி ருந்தது என தரவுகள் தெரிவித்தன.

நாலந்தா பல்கலைக்கழக நூலகத்தில் மிகவும் புனிதமான கையெழுத்துப் பிரதிகள் பலவும் இருந்தன. ஆக்கிரமிப்பாளர்கள் கட்டடங்களுக்குத் தீ வைத்த பிறகு நூலகம் மூன்று மாதங்களுக்குத் தொடர்ந்து எரிந்தது எனவும் கூறப்படுகிறது.

துருக்கிப் படையெடுப்பாளர்கள் பல ஆலய மடங்களைச் சூறையாடி அழித்து, துறவிகளை அந்த இடத்திலிருந்து விரட்டினர் எனவும் வரலாற்றுத் தரவுகள் தெரிவித்தன.

### நாஜிகளால் புத்தக எரிப்பு பிரச்சாரம்

இரண்டாம் உலகப் போரில் போலந்து , ஆஸ்திரியா போன்ற ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் நாஜிகளால் நூலகங்கள், புத்தகங்கள் பலவும் எரிக்கப்பட்டன.

நாஜி புத்தக எரிப்பை கலாச்சார படுகொலை என்றே கருதலாம். ஜேர்மன் மாணவர் சங்கத்தால் (Deutsche Studentenschaft, DST) 1930 களில் ஜேர்மனி மற்றும் ஆஸ்திரியாவில் புத்தகங்களை சம்பிரதாயமாக எரிக்கும் பல நிகழ்வுகள் நடந்தன. நாசிசத்துக்கு எதிரான சித்தாந்தங்களை பிரதிநிதித்துவப்படுத்துவது அல்லது நாசிசத்துக்கு எதிரானது என்று கருதப்பட்ட இலக்கான புத்தகங்கள் பலவும் எரிக்கப்பட்டன. யூதர்கள், கம்யூ னிஸ்ட்கள், சோசலிஸ்ட்கள், எழுதிய புத்தகங்கள் இதில் அடங்கும்.

எரிக்கப்பட்ட புத்தகங்களில் கார்ல் மார்க்ஸ் மற்றும் கார்ல் காட்ஸ்கியின் புத்தகங்கள், ஆனால் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், ஹெலன் கெல்லர், பிரஞ்சு மற்றும் ஆங் கிலத்தில் எழுத்தாளர்கள் மற்றும் நாஜி சித்தாந்தத்துடன் பொருந்தாத அனைத்து புத்தகங்களும் எரிக்கப்பட்டன.

ஏப்ரல் 8, 1933 இல், ஜேர்மன் மாணவர் சங்கத்தின் (DST) பத்திரிகை மற்றும் பிரச்சாரத்துக்கான முதன்மை அலுவலகம் நாடு தழுவிய இலக்கிய சுத்திகரிப்பு இயக்கத்தை (Sauberung) நெருப்பாய் அமுல்படுத்தியது.

தூய்மையான தேசிய மொழி, ஜேர்மன் கலாச்சாரம், இலக்கியத்தை சுத்தப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, பல்கலைக் கழகங்கள் ஜேர்மன் தேசியவாதத்தின் மையங்களாக இருக்க வேண்டும் என்று கோரி வேற்று மொழிப் புத்தகங்கள் பல்லாயிரம் எரிக்கப்பட்டன.

அக்காலத்தில் ஜேர்மனிய நூலகத்தில் ஆயிரக் கணக்கான ஆய்வுத் தொகுதிகள் இருந்தன. ஆராய்ச்சி, சுயசரிதைகள் மற்றும் நோயாளியின் பதிவுகள் உள்ளிட்ட புகைப்படங்கள் மற்றும் ஆவணங்களின் கணிசமான சேகரிப்பையும் இந்த நிறுவனம் கொண்டிருந்தது. 25,000 க்கும் மேற்பட்ட ஜேர்மன் எதிர்ப்புப் புத்தகங்கள் இவ்வாறு எரிக்கப்பட்டன.

### லெபனான் திரிபோலி நூலக எரிப்பு

லெபனானின் மிகப் பெரிய நூலகமான திரிபோ லியின் (Burning library in Tripoli) வரலாற்றுச் சிறப்பு மிக்க அல் சயே நூலகம் 2014 ஜனவரி 4 அன்று

தொடர்ச்சி▼



# உலக வரலாற்றில் எரித்து அழிக்கப்பட்ட நூலகங்கள்

தொடர்ச்சி▲

எரிக்கப்பட்டது. அங்கிருந்த 80,000 புத்தகங்கள் மத்திய கிழக்கில் வன்முறையின் உச்சக்கட்டம் அதிகரித்த காலத்தில் எரிந்தது.

லெபனானில், நூலகத்தின் தீவைப்பு மதத் தீவிரவாதத்தின் விளைவாகும் என்று நம்பப்படுகிறது. இந்தப் பிராந்தியத்தில் நூலகங்கள், வரலாற்றுக் கட்டடங்கள் மற்றும் தொல்பொருள் இடங்களின் அழிப்பும் இழப்பும் அதிகரிக்கிறது.

2011 ஆம் ஆண்டில், கெய்ரோவில் எதிர்ப்பாளர்களுக்கும் அரச படைகளுக்கும் இடையே நடந்த சண்டைகள் எகிப்தின் பெரிய நூலகங்களில் ஒன்றான எகிப்து கல்வி நிலைய நூலகமும் (Institute Of Egypt) டிசெம்பர் 18, 2011 அன்று, தீப்பிடித்தது.

அரச எதிர்ப்பாளர்கள் நூலகத்துக்குள் நெருப்பை வீசியதாக அரசு கூறியது. ஆயினும் போராட்டக்காரர்கள் இராணுவத்தின் மீது குற்றம் சாட்டினர்.

இறுதியில் பன்னிரண்டு மணி நேரம் எரிந்து அரிய புத்தகங்கள்கரியாக மாறியது. எகிப்தின் ஒரு தேசிய புதையலான பாரிய நூலகம் இவ்வாறே அழிக்கப்பட்டது. அதேவேளை ஐஎஸ்ஐஎஸ் எனும் இஸ்லாமிய தீவிரவாத இயக்கம் ஈராக், சிரியாவில் பல நூலகங்களையும் கல்வி நிலையங்களையும் கடந்த 2014-16 காலங்களில் பெரும் எண்ணிக்கையில் அழித்தது.

### எரிக்கப்பட்ட ஹாட்லி கல்லூரி நூலகம்

இலங்கையில் இனவெறித்தனத்தை வெளிப்படுத்திய மற்றுமொரு நூலக அழிப்பின் அடையாளமாக இருப்பது, முற்றாக எரியூட்டப்பட்ட ஹாட்லிக் கல்லூரி நூலகம் நிகழ்வாகும்.

1984 செப்ரெம்பர் 16 ஆம் திகதி தமிழரது அறிவின் மீது தீரா வெறுப்புக் கொண்டிருந்த பேரினவாதம் ஹாட்லிக் கல்லூரி கட்டடங்களுக்குத் தீ மூட்டியது. அவர்களது பிரதான இலக்கு நூலகமாகவே இருந்தது. இந்தத் தீ மூட்டலையடுத்து ஆயிரக் கணக்கான நூல்கள் எரியுண்டன. பழமை வாய்ந்த ஹாட்லிக் கல்லூரியின் மீளப் பெறமுடியாத ஆவணங்கள் பலவும் எரிந்து போயின.

அவற்றுடன் பெறுமதியான அறிவியல் ஆய்வு கூடக் கருவிகளும் அழிந்து போயின. இன்னும் பல நூலகங்களும் கல்வி நிறுவனங்களும் போர்க் காலத்தில் ஈழத்தில் அழிக்கப்பட்டன.

### பல்லாயிரம் நூல்களை இழந்த கிளிநொச்சி நூலகம்

2009 இல் வன்னிப் பகுதியில் ஸ்ரீலங்கா அரசு முன்னெடுத்த யுத்தம் முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற போது சிறியதும் பெரியதுமான பல நூலகங்கள் அழிவுற்றிருந்தன. அவற்றில் பேரழிவைச் சந்தித்தது கிளிநொச்சி பொதுசன நூலகமே. இந்த நூலகம் இந்த யுத்தத்தின் போது பல்லாயிரம் நூல்களை இழந்தது.

### யாழ். நூலகம் தீக்கிரை

தமிழ் மக்களின் அரிய சொத்தாக யாழ் நூலகம் விளங்கியது. தமிழ் வாசகர்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் நாடிச் செல்லும் ஒரு கேந்திர நிலையமாக அது அமைந்தது. தமிழ் மக்களின் தேசிய மேம்பாட்டின் அடையாளமாகவே யாழ். நூலகம் விளங்கியது.

தமிழர் மேல் எழுந்த ஆத்திரம், பகைமை, எரிச்சல் அவர்களுடைய சொந்த நூலகத்தின் மேலே காட்டப்பட்டது. அரச பயங்கரவாதத்தால் இந்த நூலகம் 1981 ஜூன் 01 இல் தீக்கிரையாக்கப்பட்டது. இவ்வாறான பண்பாட்டு மையங்களை அழித்து இன்னோர் இனத்தின் எரிச்சலுக்கும் பகைமைக்கும் கொடுமைக்கும் காலாயுள்ள கருத்தோட்டங்களைப் பேரினவாதத்தின் உச்சக் கட்டம் என்றே குறிப்பிடுவர்.

பெரும்பான்மையான ஓர் இனம் சிறுபான்மையினரை ஒடுக்கும். சிறுமையை நோக்கிய அவமானச் செயலாக இந்த நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது.

தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்ட சுமார் ஒரு லட்சம் புத்தகங்கள், சுவடிகளைக் கொண்ட அழகிய நூல் நிலையம் சிங்களப் பேரினவாதிகளால் எரிக்கப்பட்ட இந்தச் சம்பவம் தமிழ் இன அழிப்பு என்ற சிங்கள இனவாதிகளின் மன எண்ணத்தை உலகுக்கு வெளிப்படுத்தியது எனலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.06.2024



## மேஷம்

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாளாக அமையும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள்.

இன்று உங்களின் பெரும்பான்மையான ஆற்றலைப் பயன்படுத்துவீர்கள். அது உங்கள் பணியில் பிரதிபலிக்கும். உங்களின் தனித் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக அதே சமயம் நகைச்சுவை உணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே புரிந்துணர்வும் நல்லிணக்கமும் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.



## ரிஷபம்

இன்றைய நாள் அனுகூலம் குறைந்து காணப்படும். வெற்றியைப் பெற பொறுமை அவசியம். நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரலாம். எனவே திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். எவ்வளவு கடினமாக உழைத்தாலும் பலன் இருக்காது. உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடனான உறவு குறித்து பெரியவர்கள் ஆலோசனை வழங்கினாலும் நீங்கள் கேட்கும் மனநிலையில் இருக்க மாட்டீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையில் மோதல்கள் ஏற்படும்.

இன்று பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. நீங்கள் பணத்தை கவனமுடன் கையாளவும்.



## மிதுனம்

இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. தேவையற்ற விஷயங்களுக்கு பதட்டமடைவீர்கள் அதனை தவிர்த்து உற்சாகமாக இருக்க வேண்டியது அவசியம்.

பணியில் நல்ல பெயர் எடுப்பதற்கான சாத்தியம் இல்லை. இதனால் உங்களுக்கு வருத்தம் ஏற்படும். உங்கள் சகபணியாளர்களை நண்பர்கள் போல கருதிப் பழக வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையுடன் சுமூக உறவு கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அப்பொழுதுதான் நல்ல புரிந்துணர்வு காணப்படும். சம்பாதித்த பணத்தை இன்று குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள்.



## கடகம்

இன்று வெற்றிகரமான நாளாக அமையும். உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களிடம் அதிக ஆற்றல் மற்றும் விழிப்புணர்வு காணப்படும்.அவை உங்களின் வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் பணியில் உங்களுக்கு திருப்தி கிடைக்கும். பணிகளை தன்னிச்சையாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியத்தை சிறப்பாக பாரமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக திடமாக இருப்பீர்கள்.



## சிம்மம்

இன்று மன உளைச்சல் காணப்படும். பாடல்கள் கேட்பது அல்லது திரைப்படங்கள் பார்ப்பது போன்ற நிகழ்ச்சிகள் மூலம் மனதில் மகிழ்ச்சி ஏற்படுத்திக் கொள்ளலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று பணிகள் மலை போல் குவிந்து கொண்டே இருக்கும். இதனால் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதில் தாமதங்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அதிக பணம் சேர்ப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே காணப்படும்.



## கன்னி

இன்று நற்பலன்கள் கூடுதலாக கிடைக்கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். சிறிய முயற்சிகள் கூட இன்று வெற்றியை அளிக்கும்.

நீங்கள் செய்யும் பணியில் சிறப்பான வளர்ச்சி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் வருமானம் உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும்.



## துலாம்

கூடுதல் பொறுப்புகள் காரணமாக இன்று உங்கள் செயல்களை செய்வது கடினமாக உணர்வீர்கள். இன்று அமைதியின்மை காணப்படும். நேர்மறை எண்ணம் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

இன்று பணிச்சுமைகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும்.

கருத்து வேறுபாடு காரணமாக துணையுடன் மோதல்கள் காணப்படும். இருவரும் மகிழ்ச்சியாக இருக்க இந்த வேறுபாடுகளை களைவது சிறந்தது. புத பகவான் உறவின் நல்லிணக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துவார்.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தொண்டை சம்பந்தமான பாதிப்புகள் காணப்படும்.



## விருச்சிகம்

இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதியும் ஈடுபாடும் தடைகளை வெற்றிப் படிகளாக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இந்தப் பயணம் உங்களுக்கு மகிழ்ச்சிகரமானதாக அமையாது. விரும்பத்தாகத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் துணையுடம் அமைதியாக மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியை பராமரிக்க உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். எனவே சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு மகிழ்ச்சி அடையும் நிலை காணப்படாது.

இன்று பதற்றம் காணப்படும். நீங்கள் அதிகப்படியாக வருத்திக் கொள்ள வேண்டாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 01-06.2024

## தனுசு

இன்றைய நாளில் அனுகூலம் சற்று குறைந்து காணப்படும். நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

பணிகளைப் பொறுத்த வரை இன்று சற்று கடினமாக காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு குறைந்து காணப்படும்.

நகைச்சுவை அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணத்தை கடனாக வாங்குவீர்கள். அதன் மூலம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.

## மகரம்

இன்று எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தி அளிக்கும். விருந்தினர் வரகை உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் மகிழ்ச்சி யாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்பு கள் காத்திருக்கும். பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். இன்று மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்துகொள்வீர்கள். உங்கள் அன்பை நிரூபித்துக் காட்டுவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக வளர்ச்சி பெறும். இன்று உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வகையில் பணவரவு காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும் இன்று நீங்கள் தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## கும்பம்

இன்று அமைதியுடன் இருக்க நீங்கள் தைரியம் மற்றும் உறுதியுடன் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள நீங்கள் நேர்மறை எண்ணத் துடன் இருக்க வேண்டும்.

அதிகமான பணிகள் காரணமாக இன்று நீங்கள் ஓய்வின்றி வேலை செய்வீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற விவாதங்களை தவிர்க்க வேண்டும். உங்களின் மன நிலை தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்பதால் மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளன. வீண் விரயங்கள் காணப்படும்.

## மீனம்

நீங்கள் அறிவு பூர்வமாக செயலாற்றுவதன் மூலம் இன்று எழும் பிரச்சினைகளைக் கையாள இயலும். இன்றைய நாளைச் சாதகமாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன்றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிகமாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும். ஒவ்வாமை காரணமாக சளி இருமல் போன்ற தொல்லைகள் காணப்படும்.

